பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 29 திங்கட்கிழமை (15-10-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:323

# பதவிக்கு வரும் அரசு புலிகள் மீதான தடையை நீக்கி பேச்சு நடத்தவேண்டும்

## கூட்டணியின் செயற்குழு நேற்றுக் கூடித் தீர்மானம்

கொழும்பு,ஒக்ரோபர்15

**பொதுத் தேர்தலுக்குப் பின்னர் எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் அது உடனடியாக யுத்தத்தை நிறுத்தி - புலிகள் மீதான தடையை நீக்கி - தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அவர்களோடு பேச்சு நடத்த வேண்டும்.**

**கொழும்பில் நேற்று நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழுவின் விசேட கூட்டத்தில் இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது.**

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டதையடுத்து, கட்சி எடுக்கவேண்டிய அரசியல் நிலைப்பாடு மற்றும் தமிழ்க் கட்சிகளுடன் தேர்தல் கூட்டு அமைப்பது தொடர்பாக ஆராய்ந்து முடிவு எடுப்பதற்காக கூட்டணியின் சிரேஷ்ட துணைத் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் கட்சித் தலைமையகத்தில் இந்த விசேட செயற்குழுக் கூட்டம் நேற்றுக் கூட்டப்பட்டது.

நேற்றைய கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்கள் வருமாறு:-

☆ பொதுத் தேர்தலின் முடிவில் எந்தக் கட்சி ஆட்சி அமைத்தாலும் நாட்டில் - குறிப்பாக வடக்கு - கிழக்கில் - தொடர்ந்து நடைபெற்றுவரும் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும்.

☆ வடக்கு - கிழக்கில் - குறிப்பாக அரசின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு - உணவு, மருந்து மற்றும் அத்தியாவசிய தேவைகள் தொடர்பாக நிலவும் தடைகள் தாமதமின்றி நீக்கப்பட வேண்டும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. ஆட்சி அமைத்தால்
## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவி சரத் முனசிங்கவுக்கு?

கொழும்பு,ஒக்.15

ஐக்கிய தேசியக் கட்சி பொதுத் தேர்தலில் வெற்றியீட்டி ஆட்சி அமைத்தால் அந்த அரசில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவி மேஜர் ஜெனரல் சரத்முனசிங்கவுக்கு வழங்கப்படும் என்று ஐ.தே.க. வட்டாரங்களை மேற்கோள்காட்டி தகவல் வெளியாகி இருக்கிறது.

ஓய்வுபெற்ற மூத்த இராணுவ அதிகாரிகளில் ஒருவரும், பிரதி சபாநாயகருமான சரத்முனசிங்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து விலகி ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்திருப்பது தெரிந்ததே.

ஐ.தே.கவில் இணைந்து கொண்டதற்கான காரணங்களை அவர் அடுத்த சில தினங்களில் தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றின் மூலம் அல்லது பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் விளக்குவார் என்றும் -

பொல்காவல மாவட்டத்தில் ஐ.தே.க. சார்பு வேட்பாளராகப் போட்டியிட அவர் விருப்பம் கொண்டுள்ளதாகவும் - (12 ஆம் பக்கம் பார்க்க)

## எல்லாளன் படையின் துண்டுப்பிரசுரம்

மட்டக்களப்பு,ஒக்.15

'எல்லாளன் படை' என்ற பெயரில் கிழக்கில் நேற்று துண்டுப் பிரசுரம் ஒன்று வெளியாகி இருக்கிறது.

செய்தியூடகங்களுக்கும், அரசியல் கட்சிப் பிரமுகர்களுக்கும் 'பக்ஸ்' மூலம் அனுப்பப்பட்ட இப்பிரசுரத்தில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து ஓரணியில் போட்டியிட்டு தமிழர் உரிமைக்குக் குரல்கொடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## 3 போராளிகள் உயிரிழப்பு

முல்லைத்தீவுக் கடலில் கடந்த வெள்ளிக்கிழமை கடற்படையினருடன் இடம்பெற்ற சண்டையில் தமது தரப்பில் அருமைச்சாமி சுபாசினி (யாழ்ப்பாணம்) என்பவரும் -

அதேதினம் மணலாறுப் பகுதியில் படையினருடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதலில் கலையரசு (நவரத்தினம் திருக்குமரன் - யாழ்ப்பாணம்), மலர்கொடி அல்லது சிலம்புச்செல்வி (ஆறுமுகம் தனலட்சுமி - ஒட்டுசுட்டான்) ஆகியோரும் -

களப்பலியானதாகப் 'புலிகளின் குரல்' அறிவித்தது. (ஐ-3)

## எந்த அணியுடனும் கூட்டு இல்லை
## தனித்துப் போட்டியிட ஈ.பி.டி.பி. தயாராகிறது!

யாழ்ப்பாணம்,ஒக்.15

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஈ.பி.டி.பி. எந்தக் கட்சியுடனும் கூட்டு வைக்காது யாழ்ப்பாணம் உட்பட சகல இடங்களிலும் அது தனித்தே போட்டியிடும்.

ஈபிடிபி அமைப்பின் யாழ்மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.வி. குகேந்திரன் (ஜெகன்) இவ்வாறு தெரிவித்தார்.

பொதுத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக தமது கட்சியின் நிலைப்பாடு குறித்து 'உதயனுக்கு' கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஈபிடிபி எந்தக் கட்சியுடனும் கூட்டுச் சேராமல் தனித்துவமாக யாழ்ப்பாணம் உட்பட வடக்கு - கிழக்கின் சகல மாவட்டங்களிலும், மலையகத்திலும், கொழும்பிலும் வேட்பாளர்களை நிறுத்தும்.

தம்முடன் கூட்டுச் சேரும்படி பல

(12 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டுவீச்சில் 2 மீனவர்கள் காயம்

வவுனியா,ஒக்.15

முல்லைத்தீவு அலம்பில் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை காலை ஸ்ரீலங்கா விமானப்படை விமானங்கள் நடத்திய தாக்குதலில் இரு மீனவர்கள் படு காயம் அடைந்துள்ளனர் எனப் 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது.

இந்தத் தாக்குதலில் அந்தப் பகுதியில் உள்ள குடிசை ஒன்று முற்றாகச் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## மட்டக்களப்பு கடற் பகுதி ஊடாக
## பெரும் தொகையான ஆயுதங்களை விடுதலைப் புலிகள் தரையிறக்கினர்?

கொழும்பு,ஒக்.15

கப்பல்கள் மூலம் கடத்திவரப்பட்ட பெரும் தொகையான ஆயுத தளபாடங்களை மட்டக்களப்புக் கடற்பகுதி ஊடாகப் புலிகள் தரையிறக்கிவிட்டதாக அதிகார பூர்வ பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தகவல் வெளியிட்டிருக்கிறது.

முல்லைத் தீவுக் கடற்பரப்பில் கடந்த வெள்ளியன்று கடற் புலிகளின் படகு அணி ஒன்று கடற்படையினரால் தாக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து புலிகளின் இந்த ஆயுதத் தரை இறக்கம் குறித்த சந்தேகம் பாதுகாப்பு வட்டாரங்களில் எழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'ஒப்பரேஷன் வர்ணகிரண' என்ற நிரந்தர கடல் முற்றுகை நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் கடற்படையினர், கடந்த வெள்ளியன்று முல்லைத்தீவுக்கு அப்பால் சர்வதேச கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் படகு அணிகளின் நடமாட்டத்தை அவதானித்துள்ளனர்.

சர்வதேச கடற்பரப்பில் இருந்து திரும்பிக் கொண்டிருந்த புலிகளின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பீரிஸ், திஸநாயக்க குழுவினர் கதிர்காமம் சென்று பிரார்த்தனை!
### வழியில் பொலிஸார் சோதனை

கொழும்பு,ஒக்.15

தேர்தலில் வெற்றிபெற இறை ஆசி வேண்டி கதிர்காமத்துக்கு விஜயம் செய்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் அதிருப்திக் குழுவினரை ஹிங்குராங்கெத்த என்னும் இடத்தில் வைத்து பொலீஸார் சோதனை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், எஸ்.பி.திஸநாயக்க, மஹிந்த விஜேசேகரா ஆகியோர் கதிர்காமத்துக்குச் செல்லும் வழியில் ஹிங்குராங்கெத்தவில் உள்ள எஸ்.பி.திஸநாயக்க வின் சகோதரரின் சுற்றுலா விடுதியில் தங்கியிருந்த சமயம் -

அங்கு வைத்து அவர்கள் பொலீஸாரால் சோதனை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சோதனை நடவடிக்கைக்காக கொழும்பில் இருந்து சுமார் 50 பேர் கொண்ட பொலீஸ் குழு ஹிங்குராங்கெத்த பகுதிக்குச் சென்றிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## புளொட் அமைப்பும் தனித்துப் போட்டி

கொழும்பு,ஒக்.15

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமையிலான தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பில் இணைந்து கொள்ள புளொட் தயாராக இருப்பதாகவும் -

ஆனால் இது தொடர்பாகத் தமக்கு எந்தவித அழைப்புக்களும் விடுக்கப்படவில்லை எனவும் -

இதன் காரணமாக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தமது கட்சி தனித்துப் போட்டியிடும் என்றும் -

புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார். (ஐ-9)

## 'உதயசூரியன்' சின்னத்தை ஏற்க தமிழ்க் காங்கிரஸ் பின்னடிப்பு!
### இறுதி முடிவு எடுப்பதில் தாமதம்

கொழும்பு,ஒக்.15

தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, சுரேஷ் அணி ஆகியன ஒன்று சேர்ந்து அமைத்துள்ள தேர்தல் கூட்டணியில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் இணைந்துகொள்வது தொடர்பாக இன்னமும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

இந்தக் கூட்டணியில் இணைந்து கொள்ள தமிழ்க் காங்கிரஸ் இணக்கம் தெரிவித்துள்ள போதிலும் பொதுச சின்னமாக 'உதய சூரியன்' சின்னத்தை ஏற்பதற்கு அக்கட்சி பின்னடித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) ஆகியன இணைந்து கூட்டணி அமைத்திருப்பதும் -

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னமான உதயசூரியன் சின்னத்தின் கீழ் போட்டியிட இணக்கம் கண்டுள்ளதும் -

தெரிந்தவையே.

இந்தக் கூட்டணியில் இணைந்து போட்டியிட சில நிபந்தனைகளுடன் தமிழ்க் காங்கிரஸும் முன்னர் முன்வந்திருந்தது.

எனினும் நேற்றிரவு இடம்பெற்ற இறுதிக்கட்டப் பேச்சுக்களில் இது தொடர்பாக இணக்கம் ஏற்படவில்லை என்றும் -

இது குறித்த இறுதி முடிவு இன்று எடுக்கப்படலாம் என்றும் -

காங்கிரஸ் தலைவர் அ.விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

'உதய சூரியன்' சின்னத்துக்குப் பதிலாக பொதுச்சின்னம் ஒன்றில் போட்டியிடவே தமது கட்சி விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

காங்கிரஸின் செயற்குழு இன்று பிற்பகல்கூடி ஆராய்ந்தபின்னர் தனது முடிவை அறிவிக்கும் என்றும் விநாயகமூர்த்தி கூறினார். (ஐ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# யாழ். உட்பட சகல மாவட்டங்களிலும் ஐ.தே.கட்சி வேட்பாளர்களை நிறுத்தும்

## காமினி அத்துக்கொறளை உதயனுக்குத் தகவல்

கொழும்பு,ஒக்.15

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி யாழ்ப்பாணம் உட்பட சகல மாவட்டங்களிலும் வேட்பாளர்களை நிறுத்தும்.

கட்சியின் பிரதித் தலைவர் காமினி அத்துக்கொறளை இத்தகவலைத் தெரிவித்தார்.

தேர்தல் நிலைவரம் தொடர்பாக உதயனுக்குத் தகவல் தெரிவிக்கையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த தேர்தலில் யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு, திருகோணமலை, திகாமடுல்ல ஆகிய மாவட்டங்களில் வாழும் தமிழ் மக்கள் எமது கட்சிக்கு வாக்களித்துப் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்தனர். அந்த மக்கள் எமது கட்சிமீது வைத்துள்ள நம்பிக்கையை மதித்து, அந்த மாவட்டங்களில் எல்லாம் வேட்பாளர்களை நிறுத்தவுள்ளோம்.

வேட்பாளர்கள் தொடர்பான இறுதி முடிவுகள் எடுக்கப்படவில்லை. வேட்பாளர்கள் குறித்து கட்சியின் நியமனக்குழு ஆராய்ந்து வருகின்றது - என்று அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் தேர்தலில் தமது கட்சி பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைப்பது உறுதி என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (ஐ-3)

# அதிருப்திக் குழுவினர் இணைந்து தேசபக்த முன்னணி அமைத்தனர்

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இருந்து அண்மையில் வெளியேறிய அதிருப்தியாளர் குழு ஸ்ரீலங்கா சுதந்திர தேசபக்த முன்னணி (Sri Lanka Freedam Patriotic Alliance) என்ற புதிய அமைப்பை உருவாக்கியுள்ளது.

அதிருப்திக் குழுவின் முக்கிய தலைவர்களான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், எஸ்.பி.திஸநாயக்க ஆகியோர் இணைந்து இந்தக் குழுவை அமைத்துள்ளனர்.

ஐ.தே.கட்சியின் வெற்றிக்காக இந்த முன்னணி பிரசாரப் பணிகளில ஈடுபடும் என்றும் -

ஐ.தே.கவுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடும் என்றும் -

அந்த முன்னணிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (ஐ-3)

### முகமாலையில் 2 படையினர் காயம்

கொழும்பு,ஒக்.15

முகமாலையில் படையினரின் முன்னரங்கநிலைப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை 2.30 மணியளவில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் படையினர் இருவர் காயமடைந்ததாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது. (ஐ-3)

# பொ.ஐ.முன்னணியில் 5 கட்சிகள் கதிரைச் சின்னத்தில் போட்டி!

கொழும்பு,ஒக்.15

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் ஐந்து கட்சிகள் இணைந்து கதிரைச் சின்னத்தில் போட்டியிடவிருக்கின்றன.

சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, மக்கள் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியன இந்த முன்னணியில் இணைந்து போட்டியிடும் என்று முன்னணியின் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தக்கட்சிகள் தமக்குள் தொகுதிப் பங்கீடுசெய்து சகல மாவட்டங்களிலும் போட்டியிடும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஜே.வி.பி. அமைப்பு இந்த முன்னணியில் இணையாமல் தனித்துப் போட்டியிடும் என்றும -

தேர்தல் முடிவடைந்த பின்னர் பொ.ஐ.முன்னணிக்கு ஆதரவு வழங்குவது குறித்து முடிவு செய்யப்படும் என்றும் -

ஜே.வி.யின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார். (ஐ-3)

### தனங்களப்பில் வெடி பொருள்கள் மீட்பு

கொழும்பு.ஒக்.15

தென்மராட்சியில் நுணாவில், தனங்களப்பு பகுதியில் இருந்து நேற்றுமுன்தினம் பெருமளவு ஆயுத தளபாடங்களைப் படையினர் மீட்டுள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

நுணாவில் பகுதியில் கைவிடப்பட்ட வீடு ஒன்றில் 30 கைக் குண்டுகளும், ஆயிரத்து 650 ரவைகளும் -

தனங்களப்பு பகுதியில் படையினர் மேற்கொண்ட தேடுதலின் போது 81எம்.எம். குண்டுகள்-6, வெடிக்காத கிளைமோர்-2, கைக்குண்டுகள்-1, 60எம்.எம். மோட்டார் குண்டுகள்-3 ஆகியவற்றையும் -

மீட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

# வயல் உழவு நடவடிக்கைகளுக்கு எரிபொருள் எடுத்துச்செல்ல கட்டுப்பாடுகள் தளர்வு

## மட்டக்களப்பில் படையினர் அறிவிப்பு

கொழும்பு,ஒக்.15

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் உள்ள வயல் நிலங்களுக்கு எரிபொருள் மற்றும் விவசாய உபகரணங்களை எடுத்துச்செல்வதற்கும் பாதுகாப்புத் தரப்பினரால் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளதாக மாவட்ட சிவில் விவகார இராணுவ இணைப்பதிகாரி லெப்ரினன்ட் கேணல் எஸ்.எஸ்.குணசேகர தெரிவித்துள்ளார்.

இதன்படி, வயல் உழவு வேலைகளில் ஈடுபடும் உழவு இயந்திரமொன்றின் தாங்கியில் 15 லீற்றர் டீசல் கொண்டுசெல்லமுடியும். இதற்கு மேலதிகமாக ஒவ்வொரு ஏக்கருககும் தலா 15லீற்றர் வீதம் டீசலைக் கொள்கலன்களில் எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படும்.

இதேபோன்று, நெல் அறுவடை மேற்கொள்ளப்படும்போது உழவு இயந்திரத்தின் எரிபொருள் தாங்கியில் 10 லீற்றர் டீசல் எடுத்துச் செல்வதற்கு விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடகப் பாதுகாப்புத் தரப்பினரின் அனுமதி பெறப்படுவது அவசியம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

உழவு காலங்களில் உழவு இயந்திரம் கட்டுப்பாடற்ற பகுதிகளில் இருதினங்கள் தரித்துநிற்கமுடியும். அதன் பின்னர் அதனை இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு கொண்டுவரப்படவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ-9)



சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் அண்மையில் நடத்தப்பட்ட கிராம மட்டத் தலைமைத்துவ பயிற்சி நெறியை சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்திற்காணலாம்.

இவ்வைபவத்திற்குத் தலைமை வகித்த சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க.ஸ்ரீபதி, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் மு.பாலசிங்கம், நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.செல்வராஜா ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (ஐ-135)

### முன்பள்ளி ஆசிரியர் பயிற்சிக் குழு

யாழ்ப்பாணம்,ஒக்.15

குடாநாட்டிலுள்ள 160 முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்குரிய பயிற்சிகளை வழங்குவதற்காக 16 பேர் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

இந்தப் பயிற்சிகளை வழங்குவதற்காக ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்ட 21 பேருக்குமான செயலமர்வு கடந்த 10 ஆம் திகதிமுதல் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெற்றுவருகிறது.

இந்தச் செயலமர்வின் இறுதி நாளான இன்று தொடக்கம் இந்த 21 பேரின் செயற்பாடுகளும் தொடர் மதிப்பீடு செய்யப்பட்டு, இவர்களில் திறமை அடிப்படையில் 16 பேர் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

இந்த 16 பேரும் 160 முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கும் இந்த வருட இறுதிக்குள் உரிய பயிற்சிகளை வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-4)


## மரண அறிவித்தல்

### திருமதி புவனேஸ்வரி துரைராஜா

சுட்டுடையைப் பிறப்பிடமாகவும் கச்சேரியடியை வசிப்பிடமாகவும் கொண்ட புவனேஸ்வரி துரைராஜா 06.10.2001 அன்று புதுக் குடியிருப்பில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற கிட்டுனர் - சின்னத்தங்கச்சி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற துரைராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற உமா மற்றும் இரகுநாதன் (டென்மார்க்), உஷா, இராமநாதன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - நல்லூர்), இரங்கநாதன், விசுவேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், இலட்சுமிகாந்தன், ஜெயகாந்தன், விஜயகாந் தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி பரமேஸ்வரியின் மைத்துனியும், சிவஞானம், யசோதா, சசிரேகா ஆகியோரின் மாமியாரும், கீர்த்திகா, மதனரூபன், உமாநேசன், பிரியங்கா, மானுகா ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புதுக்குடியிருப்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*92, கண்டி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
து.இராமநாதன்
(மகன்)

(93459)


## வாசகர் திருமுகம்

# நூல்கள் எழுதத் தயக்கம் ஏன்?

"புதிய கல்விச்சீர்திருத்தங்களை முழுமையாக நடைமுறைப்படுத்துக" என்ற தலைப்பில் கடந்த வெள்ளிக்கிழமை (12-10-2001) உதயனில் பிரசுரமாகியிருந்த செய்தியில் வட-கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர், 1998ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட புதிய கல்விச்சீர்திருத்தக் கொள்கைகளை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்களைக் கேட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இது எனது கவனத்தை ஈர்த்தது. ஆனால் அந்தச் செய்தியைத் தொடர்ந்து வாசித்தபொழுது, செயலாளர் குறிப்பிடுவது கல்வித் திணைக்களத்தின் செயற்பாடுமுறைகளைப் பற்றியது மட்டுமே என்பது தெரிய வந்தது. இது எனக்கு மிகவும் ஏமாற்றத்தை அளித்தது. பெயர்ப் பலகைகளும் இறப்பர் முத்திரைகளைப் பற்றியுமே அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

புதிய கல்விச்சீர்திருத்தத்தைப் புத்திஜீவிகள், கல்விமான்கள் வரவேற்றதற்கு ஒரு பிரதான காரணம் அதன் ஊடாகப் பிள்ளைகள் சுயமாக விடயங்களை அறிந்து, வருங்காலத்தில் தங்களை சொந்தக் கால்களில் நிற்கக்கூடிய வழிகளை முன்னெடுக்கும் என்பதாகும். இவற்றில் ஒன்று பாடசாலைகளில் தற்பொழுது அறிமுகப்படுத்தியிருக்கும் ஒப்படைகள் சமர்ப்பிக்கும் முறையாகும். இதன் மூலமாகப் பிள்ளைகள் குறிப்பிட்ட விடயங்களைத் தாங்களே ஆராய்ந்து கட்டுரைவரைய வேண்டும். இது மிகவும் சிறப்புடைய அம்சமாகும்.

ஆனால் ஒப்படைக்கு ஆராய்ச்சி செய்யக்கூடிய மூலவளங்கள் தமிழில் மிகவும் குறைவாகவே இருக்கின்றன. தற்பொழுது பிள்ளைகளுக்கு அவர்களின் அறிவு கல்வித்திணைக்களத்தினால் கொடுக்கப்படும் ஒரு பாடத்துக்கு ஒரு புத்தகம் என்றவாறு மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஒரு விடயத்தைப்பற்றி மேலும் அறிவதற்கு அவருக்குத் தேவையான வசதிகளோ, வளங்களோ இல்லை. இதனால் அவர்களுக்கு வழிகாட்டும் ஆசிரியர்கள் பாடும் மிகவும் கவலைக்கிடமானதுதான்.

பாடசாலைகள் பலவற்றில் வாசிகசாலைகளோ, நூலகங்களோ இல்லை. நூலகங்கள் இருந்தாலும், அவற்றில் தமிழில் கூடியனவாக நாவல்களும், இலக்கிய நூல்களுமே இருக்கின்றன. சரித்திரம், புவியியல், விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொருளியல், முகாமைத்துவம் போன்றவற்றில் நூல்கள் இல்லை. தெற்கில் ஒப்பிடும் பொழுது பலர் இத்துறைகளில் சிங்களத்தில் நூல்கள் எழுதுவதனால் சிங்கள மாணவர்களுக்கு மேலும் விடயங்களை அறிவதற்கு வாய்ப்பு இருக்கின்றது.

தமிழில் எழுதக்கூடியவர்கள் எம்மிடத்தில் இருந்தும் பலர் இலக்கியத்திலும் சமயத்திலும், கதைகள் எழுதுவதிலும் ஆர்வம் காட்டுகிறார்களே தவிர, மேற்கூறிய துறைகளில் எழுதாதது விசனத்திற்குரியதே. இளைப்பாறிய ஆசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் இத்துறைகளில் எழுதமுன்வராதது புரியாத புதிராகவே இருக்கின்றது. இவர்களில் பெரும்பாலோர் ஆங்கிலத்தில் கல்விகற்றவர்கள் ஆகையால் ஆங்கிலத்தில் கிடைக்கப்பெறும் விடயங்களை எங்களுடைய வருங்கால சந்ததியர்களான மாணவர்களுக்குத் தமிழில் வடிவமைத்துக் கொடுக்கலாம்தானே.

தனிமனிதன் இதைச் செய்வது கடினமாயின், பல கல்லூரிகளின் பழைய மாணவர் சங்கங்கள் ஒன்றிணைந்து இதைச் செய்ய முற்படலாம். வேண்டிய வசதிகளையும், பணமூலதனத்தையும் கொடுத்து இச் சங்கங்கள் ஊக்கத்தைக் கொடுக்கலாம். பல துறைகளிலும் புத்தகங்கள் பிரசுரிப்பதை எமது சமுதாயம் தன்னுடைய முதற்கண் கடமையாக ஏற்றுச் செயற்படல் வேண்டும். இதற்கு கல்விமான்களும், ஆசிரியர்களும், விரிவுரையாளர்களும், ஊடகங்களும் முயற்சிசெய்யவேண்டும்.

*தாவடி.*

கலாநிதி
வே.நவரெத்தினராசா.

# மண் இன்றேல் நாமில்லை....

யாழ்.பல்கலைக்கழக நிதியாளர் க.கனகரத்தினம் ஆற்றிய உரை 2001.09.30ஆம் திகதிய 'உதயன்' பத்திரிகையில் பிரசுரமாகி இருந்தது.

இந்த உரை எமது கற்றாய்ந்த பெருங்குடி மக்களின் உள்ளத்தை ஊடுருவிச் சீண்டிப் புத்துணர்வைத் தட்டியெழுப்ப உதவிடும் என்பது எனது எதிர்பார்ப்பு.

மண்ணுடன் பிரிக்க முடியாத, ஒன்றிணைந்த உரிமை பூண்டவை கல்வி, கலாசார, மத, அரசியற்றுறைகள். இவை அனைத்தையும் கொச்சைப்படுத்தும் வகையில், சுயநலம் என்ற ஒரே நோக்கில், அந்தந்தத் துறையைச் சார்ந்த ஒரு சில புல்லுருவிகள், பகீரதப்பிரயத்தனம் செய்வது அண்மைக்கால தேசத்துரோக நிகழ்வாகும்.

எம்மவர்சிலர் எமது அரிய புராதன பண்பாட்டு விழுமியங்களின் தூய்மையை உணராது அவற்றையும், மறைமுகமாக எமது மண்ணையும் ஏற்றுமதி செய்வதுடன் நில்லாது பண்டமாற்றாக எமக்கு எவ்வகையிலும் ஒவ்வாத அந்நிய நாகரிகத்தை அவாவி, இறக்குமதி செய்வது எமது தனித்துவத்தை அழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இத்தகைய நடவடிக்கைகள் எமது சமூகத்தின் அழிவுக்கே வழிகோலும் என்ற உண்மை அவர்களுக்குத் தெரியாமல் இருக்கமுடியாது.

மற்றும், அரசியலை நோக்குங்கால் எமது முழுச சமுதாயமே ஒட்டுமொத்தமாக அழிவின் விளிம்பில் தத்தளித்து அவலப்படும் இவ்வேளை, எமது அரச பிரதிநிதிகளாக எம்மால் தெரிவுசெய்யப்பட்டவர்களுட் சில நன்றி கெட்டோர் கோடரிக்காம்புகளாக மாறி, எம்மினத்தை மறைமுகமாக மண்ணை ஏலங்கூறுவதை என்னென்று உரைப்பது?

மண்ணின் தூய்மை தெரியாத இவர்கள் தங்கள் கண்களுக்குள் தாங்களே மண்ணைத் தூவிக் கெடுக்கிறார்கள். அவ்வழியில் தங்கள் அழிவைத் தாங்களே தேடுகிறார்கள்.

மண் இன்றேல் நாமில்லை. மண்ணைக் காக்கவும்.

*புலோலி.*

வே.ஆறுமுகம்.

## ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதலில்
# குறிதவறிய அமெரிக்கக் குண்டு
# குடியிருப்பு மீது விழுந்து வெடித்தது!
## வீடுகள் இடிந்தன; பலர் உயரிழப்பு

பெஷாவர்,ஒக்.15

தலிபான் இலக்கு மீது அமெரிக்கா வீசிய குண்டு குறிதவறி மக்கள் குடியிருப்பு மீது விழுந்ததில் பலத்த உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டன. இதனை அமெரிக்க அதிகாரிகளும் ஒப்புக் கொண்டனர்.

ஆப்கானிஸ்தானிய நேரப்படி நேற்று அதிகாலை 3 மணி அளவில் காபூலில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

காபூல் விமான நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தலிபான்களின் ஹெலிகொப்டரை இலக்கு வைத்து, அமெரிக்க போர் விமானம் குண்டை வீசியதாகவும் -

செயற்கைக் கோள் மூலம் இலக்கு நோக்கி நெறிப்படுத்தப்படும் அந்தக் குண்டு, இலக்குத் தவறி, விமான நிலையத்திலிருந்து சுமார் ஒரு மைல தொலைவில் உள்ள மக்கள் குடியிருப்புப் பிரதேசத்தின் மீது விழுந்து வெடித்ததாகவும் - பென்டகனை மேற கோள்காட்டி இந்திய வானொலி தெரிவித்தது.

2 ஆயிரம் இறாத்தல் நிறையுடைய அந்தக் குண்டு விழுந்து வெடித்ததில் ஏராளமான வீடுகள் இடிந்து நொறுங்கியதாகவும் -

அவற்றில் உறங்கிக் கொண்டிருந்த அப்பாவி மக்கள் பலரும் உயிரிழந்ததாகவும் - தலிபான் வட்டாரங்கள் கூறின.

கட்டட இடிபாடுகள் அகற்றப்பட்ட பின்னரே, உயிரிழப்புகள் குறித்த விவரம் வெளிவரும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ)



ஆப்கானிஸ்தான் மீது தாக்குதல் நடத்தத் தயாராகும் அமெரிக்க குண்டுவீச்சு விமானம் ஒன்றுக்கு குண்டை ஏற்றுவதற்காக அமெரிக்கப் படையினர் ஐவர் அதனைச் சுமந்து செல்வதைப் படத்தில் காணலாம்.

## அமெரிக்காவுக்கு எதிராக
# தீவிரவாதிகள் புதிய தந்திரம்; கடிதம் மூலம் பரவும் கிருமிகள்!

வாஷிங்ரன்,ஒக்.15

• கொடிய நோய்களை உண்டாக்கும் விஷக்கிருமிகளை கடிதங்கள் மூலம் அமெரிக்காவில் இஸ்லாமியத தீவிரவாதிகள் பரப்பி வருவதாகச் சந்தேகம் எழுந்துள்ளது.

வாஷிங்ரனில் உள்ள அமெரிகக மீடியா நிறுவன தலைமையகக் கட்டடத்திலும், பின்னர் புளோரிடாவின் பாம்பீச் கவுண்டியிலும், 'அந்தி ரெக்ஸ்' என்ற உயிராபத்தை ஏற்படுத்து விஷக் கிருமிகளால் பாதிப்பு ஏற்பட்டது.

அமெரிக்க மீடியா நிறுவனத்தில் பணியாற்றிய உயரதிகாரி ஒருவரும், மற்றொரு ஊழியரும், சமீபத்தில் இறந்ததற்கு "அந்திரெக்ஸ்" கிருமியே காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டது.

மேலும் 5பேருக்கு அந்தக் கிருமி தொற்றியிருப்பதும் தெரியவந்தது. இதேபோன்று புளோரிடாவிலும் 'அந்தி ரெக்ஸ்' கிருமி பரவியிருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்திருந்தனர்.

ஆனால், கொடிய விஷக்கிருமியான 'அந்தி ரெக்ஸ்' எங்கிருந்து பரவத் தொடங்கியது என்பதை அதிகாரிகள் இதுவரை கண்டுபிடிக்கவில்லை.

சந்தர்ப்ப சூழ்நிலைகளை வைத்துப் பார்க்கும்போது, அமெரிக்க மீடியா நிறுவனத்துக்கு அனுப்பப்பட்ட கடிதத தாள்களில் தீவிரவாதிகள் கிருமியைத் தடவியிருக்கலாம் என்றும் -

கடிதத்தை படிப்பவருக்கு கிருமி தொற்றிப் பரவியிருக்கலாமென்றும - தற்போது அதிகாரிகள் சந்தேகித்து, அந்தக் கோணத்திலும் விசாரணை நடத்துவதாகக் கூறப்படுகிறது. (ஒ)

## உலக அரங்கில்

### பெர்னாண்டஸுக்கு மீண்டும் பதவி

புதுடில்லி,ஒக்.15

இந்திய பாதுகாப்பு அமைச்சராக ஜோர்ஜ் பெர்னாண்டஸை மீண்டும் நியமிக்க பிரதமர் வாஜ்பாய் முடிவு செய்திருப்பதாக ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

# மத்திய பகுதி நகரொன்றை தலிபான் மீண்டும் பிடித்தது

பெஷாவர்,ஒக்.15

ஆப்கானிஸ்தானின் மத்திய பகுதி நகரான பாங்ஹரானை வடக்குக் கூட்டணிப் படைகளிடமிருந்து தாம் மீண்டும் கைப்பற்றி விட்டதாக தலிபான்கள் நேற்று அறிவித்தனர்.

தலிபான்களின் பிரதான விநியோகப் பாதையில் அமைந்திருந்த பாங்ஹரானை, கடந்த வாரம் வடக்குக் கூட்டணிப் படைகள் கைப்பற்றி இருந்தன.

தலிபான்களுக்கு எதிரான அமெரிக்கத் தாக்குதல்களை பயன்படுத்தியே, வடக்குக் கூட்டணிப் படைகள் தலிபான்களிடமிருந்து அந்த நகரைக் கைப்பற்றியிருந்தனர்.

தற்போது அமெரிக்கத் தாக்குதல்களின் மத்தியிலும் தலிபான்கள் மீண்டும் வடக்குக் கூட்டணியிடமிருந்து நகரொன்றைக் கைப்பற்றியிருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் -

வடக்குக் கூட்டணிக்கு ஆதரவு அளித்து, அதன் மூலம் தலிபான்களை வெல்லும் அமெரிக்காவின் திட்டத்துக்கு இது ஒரு பின்னடைவு என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (ஒ-4)

# விமானப் பயணங்களைத் தவிர்க்குமாறு முஸ்லிம்களிடம் அல்கெய்டா கோரிக்கை
## தற்கொலைத் தாக்குதல் தொடருமாம்



சுலைமான் அப்துல் கை

அமெரிக்கா, மற்றும் பிரிட்டனில் வாழும் முஸ்லிம்கள் அந்த நாடுகளில் விமானப் பயணங்களை மேற்கொள்ள வேண்டாமென்று ஒசாமா பின்லேடனின் அல் - கெய்டா அமைப்புக் கோரியுள்ளது. அத்துடன் அடுக்கு மாடி கட்டடங்களில் வசிப்பதைத் தவிர்க்குமாறு அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்த அல - கெய்டா, விமானத் தற்கொலைத் தாக்குதல்கள் அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் தொடர்ந்து இடம்பெறும் என்று எச்சரித்துள்ளது.

இஸ்லாமிய அடிப்படைவாத தொலைக்காட்சி நிறுவனமான அல் - ஜுபீராவில் அல் - கெய்டாவின் கோரிகையும், எச்சரிக்கையும் ஒளிபரப்பப்பட்டது.

அல் - கெய்டா அமைப்பின் பேச்சாளர் சுலைமான் அப்துல் கை இவற்றை அறிவித்த, முன்பதிவு செய்யப்பட்ட உரையையே அல் - ஜயீரா ஒளிபரப்பியது.

ஒசாமா பின்லேடனை ஒப்படைக்குமாறு அமெரிக்கா மீண்டும் விடுத்த கோரிக்கையை தலிபான்கள் நிராகரிப்பதாக அறிவித்த சில மணி நேரங்களில் அப்துல்கையின் உரையை அல் - ஜயீரா ஒளிபரப்பியது.

இதன்மூலம், அமெரிக்கா தாக்குதலால், தம்மை அடிபணிய வைக்க முடியாது என்பதை அல் - கெய்டா அமைப்பினர் எடுத்துரைத்துள்ளதாக விமர்சகர்கள் கருதுகின்றனர்.

அல் - கெய்டாவின் எச்சரிக்கையை நிராகரிப்பதாகவும் -

செப்ரெம்பர் 11 இல் இடம்பெற்ற விமானத் தற்கொலைத் தாக்குதல்களுக்கு அல் - கெய்டாவே காரணம் என்பது இதன்மூலம் மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் -

அமெரிக்க, பிரிட்டிஷ் அதிகாரிகள் தெரிவித்தனர். (ஒ)

# ஒஸாமா பின்லேடனை எவராலும் ஒருபோதும் பிடிக்க முடியாது
## இப்படிக் கூறுகிறார் அவரது மகன்

ஒஸாமா பின்லேடனை ஒருபோதும், எவராலும் பிடிக்கமுடியாது என்று அவரது மகன் அப்துல்லா லேடன் தெரிவித்தார்.

'சண்டே மிரர்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

பின்லேடன் இன்னமும் ஆப்கானிஸ்தானில் மலைப்பகுதிகளில்தான் இருக்கிறார் என்றும் -

அமெரிக்காவும், பிரிட்டனும், எத்தனை ஆண்டுகாலம் தேடினாலும் அவரைக் கண்டுபிடிக்கமுடியாது என்றும் - அப்துல்லா லேடன் சவால் தொனியில் தெரிவித்துள்ளார்.

ஒஸாமா பின்லேடனின் மூத்த மனைவியின் மகனான அப்துல்லா லேடன் தற்போது தனது தாயாருடன் சவூதி அரேபியாவிலேயே வாழ்ந்து வருவதாகக் கூறப்படுகிறது. (ஒ-4)

# வளைகுடா ஒத்துழைப்புச் சபை அமெரிக்காவுக்கு ஆதரவு

அமெரிக்காவால் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட, தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் உள்ள இயக்கங்கள் மற்றும் தனிநபர்களின் சொத்துக்களை முடக்கும் நடவடிக்கைக்கு வளைகுடா ஒத்துழைப்புச் சபையின் ஆறு உறுப்பு நாடுகள் ஒப்புக் கொண்டன.

பஹ்ரெய்ன் நாட்டு நிதி அமைச்சர் இதனை அறிவித்தார்.

குவைத், கட்டார், ஓமான், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பஹ்ரெய்ன், சவூதி அரேபியா ஆகிய நாடுகள் வளைகுடா ஒத்துழைப்புச் சபையில் அங்கம்வகிக்கின்றன.

பயங்கரவாதத்தை ஒடுக்கும் உலகளாவிய நடவடிக்கையின் ஒரு கட்டமாக, சட்டவிரோதமாகப் பணம் கைமாறுவதைத் தடுக்க ஒரேமாதிரியான சட்டம் இயற்றப்படவேண்டுமென்று வளைகுடா ஒத்துழைப்பு நாடுகள் கேட்டுக்கொண்டுள்ளன.

இந்த நாடுகளின் ஊடாகவே பெரும்பாலான இஸ்லாமியத் தீவிரவாத அமைப்புகள் பணப்பரிமாற்றங்களை மேற்கொண்டு வருவதாகக் கருதப்படுகிறது. (ஒ-4)

# துர்கா பூஜை அறிவிப்பால் பங்களாதேஷில் பதற்றம்!

டாக்கா,ஒக்.15

பங்களாதேஷில் வாழும் சிறுபான்மை இந்துக்கள் இந்த ஆண்டு வருடாந்த துர்கா பூஜை பண்டிகையை விமரிசையாகக் கொண்டாடப்போவதாக அறிவித்துள்ளனர். இதனால் அங்கு பதற்றம் நிலவுகிறது. •

பங்களாதேஷ் இந்துக்களுக்கான பிரதான அமைப்பு ஒன்று துர்கா பூஜைக்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றது.

வடஇந்தியப் பகுதிகளில் நவராத்திரி விழா துர்கா பூஜையாகக் கொண்டாடப்படுகிறது.

இஸ்லாமியர் பெரும்பான்மையாக வாழும் பங்களாதேஷில் கடந்த சில ஆண்டுகளாக மதரீதியிலான அச்சுறுத்தல்கள் காரணமாக துர்கா பூஜை கொண்டாடப்படுவதில்லை.

ஆனால் சிறுபான்மை இந்துக்களிடம் ஆதரவு பெற்ற பேகம் கலிதா ஷியா அரசு பதவியேற்றுள்ளதால், துர்கா பூஜையை விமரிசையாகக் கொண்டாட இந்துக்கள் முடிவு செய்துள்ளனர்.

பங்களாதேஷில் சிறுபான்மையினர் துன்புறுத்தப்படுவது குறித்த வழக்குகளை 48 மணி நேரத்துக்குள் விசாரிக்கவேண்டும் என்று பங்களாதேஷின் புதிய அரசு உத்தரவிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

## சட்ட விரோதமாக இயங்கிய
# நிலக்கரிச் சுரங்க விபத்தில் இந்தியாவில் 150 பேர் பலி!

புதுடில்லி,ஒக்.15

இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத் தலைநகரான கொல்கத்தாவுக்கு அருகில் உள்ள நிலக்கரிச் சுரங்கம் ஒன்று இடிந்து விழுந்ததில் 150 தொழிலாளர்கள் சிக்கிக்கொண்டுள்ளனர். அவர்கள் அனைவரும் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

'ராணிபத்' நிலக்கரிச் சுரங்கத்தின் அருகில் மற்றுமொரு சுரங்கத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்தச்சுரங்கம் அரசினால் மூடப்பட்டதாகவும், ஆயினும் அங்கு சட்ட விரோதமாக நிலக்கரி அகழப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

சுரங்கத்தில் பணிபுரிந்துகொண்டிருந்த 150 தொழிலாளர்களும் இடிபாட்டில் சிக்கிக்கொண்டுள்ளனர். அவர்கள் அனைவரும் உயிருடன் இருக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் மிக மிகக் குறைவாகவே காணப்படுகின்றன என்று மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்தனர். (ம-10)

# வெளிநாட்டுச் செய்தியாளர்கள் ஆப்கானிஸ்தான் சென்றனர்

ஜலாலாபாத்,ஒக்.15

ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா இராணுவ நடவடிக்கையைத் தொடங்கிய பின்னர் முதற்றடவையாக வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களை ஆப்கானிஸ்தானுக்குள் தலிபான்கள் அனுமதித்துள்ளனர்.

வெளிநாட்டுச் செய்தியாளர்கள் மற்றும் படப்பிடிப்பாளர்கள் ஆகியோர் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நேற்றுமுன்தினம் இரவு ஜலாலாபாத்தை அடைந்ததாகக் கூறப்படுகிறது.

வெள்ளிக்கிழமை அமெரிக்கத் தாக்குதல்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததை பயன்படுத்தி, செய்தியாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டதாகவும் -

அவர்கள் ஜலாலாபாத்தை அடைந்தபொழுது அங்கு குண்டுகள் வீழ்ந்து வெடிக்கத் தொடங்கிவிட்டதாகவும் - கூறப்படுகிறது.

அமெரிக்க விமானத் தாக்குதல்களால் சிதிலமான கட்டடங்களையும், சேதமடைந்த கிராமங்களையும் செய்தியாளர்களிடம் காண்பிப்பதற்காகவே, அவர்கள் அனுமதிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, ஆப்கானிஸ்தானில் உள்ள செய்தியாளர்கள், தமது தாக்குதலில் சிக்கினால், வீணான தர்மசங்கடத்தை தாம் சந்திக்க நேரிடும் என அமெரிக்க அதிகாரிகள் கவலை அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

### பாகிஸ்தானில் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

இஸ்லாமபாத்,ஒக்.15

பாகிஸ்தானின் தென்பகுதி நகரான ஜகூபாபாத்தில் நேற்று அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் மீது பொலீஸார் சுட்டதில் ஒருவர் உயிரிழந்தார்; பலர் காயமடைந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், ரயில் நிலையம் ஒன்றைத் தாக்க முற்பட்டபோதே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக அரசுத் தரப்பில் கூறப்பட்டது. (ஒ)

# போக்குவரத்துத் தொண்டர்கள் மீண்டும் கடமையில் ஈடுபடுவர்

## யாழ். பொலீஸ் வட்டாரங்கள் தகவல்

யாழ்ப்பாணம், ஒக். 15

யாழ். நகரப் பகுதியில் மீண்டும் போக்குவரத்துப் பிரிவின் தொண்டர்கள் மிக விரைவில் தமது பணிகளை ஆரம்பிக்கவிருப்பதாக யாழ். பொலீஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி—நாவலர்வீதிச் சந்தியில் கடமையில் ஈடுபட்டிருந்த சமயம் போக்குவரத்துத் தொண்டர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டதை யடுத்து போக்குவரத்துத் தொண்டர்கள் தமது கடமைகளைப் பகிஷ்கரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் மீண்டும் தமது பணிகளைப் பொறுப்பேற்கும்வரை போக்குவரத்துக் கண்காணிப்பு ஒழுங்குகளைப் பொலீஸார் மேற்கொள்வர் என்றும்—

மிக விரைவில் இந்தப் பணிகள் போக்குவரத்துத் தொண்டர்களிடம் மீண்டும் கையளிக்கப்படவிருப்பதாகவும் —

பொலீஸார்தெரிவித்தனர்.

இதேவேளை —

அண்மையில் கொலை செய்யப்பட்ட போக்குவரத்துத் தொண்டரின் கொலை தொடர்பாக யாழ். பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-4)

# குடத்தனையில் இன்று சிறுவர் முதியோர்தின விழா

வடமராட்சி கிழக்கு, ஒக். 15

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தின் சிறுவர், முதியோர் தினவிழாவும் பரிசளிப்பு வைபவமும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி. ப. வேலாயுதபிள்ளை தலைமையில் இந் நிகழ்வுகள் குடத்தனை அரசினர் தமிழ்கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளன.

வடமராட்சி வலயக் கல்வித் திணைக்கள பிரதிக்கல்விப்பணிப்பாளர் ஏ. அருளானந்தம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

பாடசாலை மட்டத்தில் சிறுவர், முதியோர் தினத்தையிட்டுநடத்தப்பட்ட கட்டுரை, கவிதைப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கும் வைபவமும் இடம்பெறும்.

(க-182)


# கண்ணீர் அஞ்சலி

எமது தர்மகர்த்தாசபை உபபொருளாளர்

லயன்ஸ் S N. கதிர்வேல் J. P.

அவர்களின் பாசமிகு தாயார்

## திருமதி நமசிவாயம் மனோன்மணி

அவர்கள் காலமான செய்தியைக் கேட்டு கவலை அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அமரருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தர்மகர்த்தாக்கள், ஊழியர்கள், சிறார்கள், முதியோர்கள்.

ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரமம்,
வதிரி, கரவெட்டி.

(93443)



# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 08 — 08 — 1930

உதிர்வு 15 — 10 — 1998

## அமரர் பொ ஆ. பிலிப் அரசரெட்டினம்

(ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர்)

வற்றாத அன்பின் ஊற்றாக வாழ்ந்து
வழிநடத்திய எம் தெய்வமே!
காற்றோடு உங்கள் உயிர்மூச்சுக் கலந்து
இன்றோடு மூன்றாண்டாச்சு!
ஆற்றமுடியாத துயரத்தின் சுமைதாங்கி வாழ்வு
இன்றோடு மூன்றாண்டாச்சு!
போற்றுதல் செய்தே இறையடியில் நின் ஆத்மா
சாந்தி பெற
வேண்டுகிறோம் தினம் தினமே.

என்றும் மறவா
அன்பு நெஞ்சங்களுடன்
அன்பு மனையாள்.

17, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம்.

(93411)


## இந்து சமய கலாசாரத் திணைக்களத்தின்

# கலாசார அலுவலர் பதவிகளுக்கு 6 மாவட்டங்களில் வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 15

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் யாழ்ப்பாணம் உட்பட 6 மாவட்டங்களில் வெற்றிடமாகவுள்ள கலாசார அலுவலர்கள் (தமிழ்) பதவிகளுக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் கீழைத்தேய மொழிகள், இந்துநாகரிகம், இந்துசமயம், வரலாறு, மெய்யியல், தொல்பொருளியல், சமூகவியல் ஆகிய பாடங்களில் ஏதேனும் இரண்டைக்கொண்ட கலைமாணிப் பட்டம் அல்லது அவற்றின் ஏதேனும் பாடத்தில் சிறப்புப் பட்டம் பெற்றிருப்பவர்கள் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவு திகதியான எதிர்வரும் நவம்பர் மாதம் 16 ஆம் திகதி 22 வயதுக்குக் குறையாதவராகவும், 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். எனினும் ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இந்த வயதெல்லை ஏற்புடையதாகாது என்றும் —

விண்ணப்பதாரிகள் இந்துப் பண்பாடும் நாகரிகமும், தமிழ்மொழி, பொதுஅறிவு என்னும் மூன்று பாடங்களில் நடைபெறும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்றும் —

அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் "பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இல. 248 1/1, காலி வீதி, கொழும்பு — 4" என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விண்ணப்பம் தொடர்பான மேலதிக விவரங்கள் கடந்த 12 ஆம் திகதி அரச வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளன. வர்த்தமானியின் பிரதியை யாழ். கஸ்தூரியார் வீதியில் உள்ள அருண்ஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்டில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

(க-7)

# பஸ்ஸில் இருந்து தவறி வீழ்ந்து குடும்பப் பெண் மரணம்!

## சங்கரத்தையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 15

சங்கரத்தைப் பகுதியில் பஸ்ஸில் இருந்து தவறி வீழ்ந்த குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் உசனில் இருந்து இடம் பெயர்ந்து சங்கரத்தையில் வசிக்கும் கனகலிங்கம் புவனேஸ்வரி வயது (47) என்பவரே மரணமானவராவார்.

இரத்த அழுத்த நோயாளியான இவர் யாழ். ஆஸ்பத்திரி 'கிளினிக்கில்' சிகிச்சை பெறுபவராவார் சம்பவதினம் கிளினிக்கிற்குச் சென்று மருந்தைப் பெற்றுக் கொண்டு வீடு திரும்புகையிலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டது.

யாழ். பஸ் நிலையத்தில் இருந்து சங்கரத்தை ஊடாகச் செல்லும் வடபிராந்திய போக்குவரத்துச் சேவை பஸ்ஸில் இந்தப் பெண் பயணம் செய்ததாகவும், இறங்கும் இடம்வந்ததும், மணியை அடித்து விட்டு, பஸ் நிறுத்த முன்பே அவசரமாக இறங்க முற்பட்டவேளை தவறி வீழ்ந்ததாகவும்கூறப்பட்டது.

வீழ்ந்து தலையில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்குட்படுத்திய நிலையில் நேற்று அதிகாலை அங்குஉயிரிழந்தார்

இதற்கான மரண விசாரணையை மேற்கொண்ட மல்லாகம் நீதிபதி, பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டதுடன், பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார்.

சம்பவம் பற்றிக் கேள்விப்பட்ட இவரது கணவர் கனகலிங்கம் அதிர்ச்சிக்குள்ளாகியதால் சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(க-15)

## யாழ். பல்கலைக்கழகத்தின்

# நுண்கலைமாணி நெறிக்கு புதிய மாணவர்கள் தெரிவு

யாழ்ப்பாணம், ஒக். 15

யாழ். பல்கலைக்கழக நுண்கலைமாணி கற்கைநெறிக்கு 2000/2001 கல்வியாண்டுக்கு ஒருதொகுதி மாணவர்கள் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின்பெயர் விவரங்களை யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி அலுவலக விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் - இசைத்துறைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் எதிர்வரும் 18 ஆம் திகதியும்—

நடனத்துறைக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் எதிர்வரும் 19 ஆம் திகதியும் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு பதிவாளர் அறிவித்துள்ளார்.

அத்துடன் சித்திரமும் வடிவமைப்பும் கற்கைநெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நாளை மறுதினம் 17 ஆம் திகதி நடைபெறவுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

### பௌதிக விஞ்ஞான கற்கை நெறிக்கும் தெரிவு

இதேவேளை — பௌதிகவிஞ்ஞான கற்கைநெறிக்கு வெற்றிடம் நிரப்பும் பட்டியல் மூலம் மேலதிகமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள 24 மாணவர்களின் பெயர் விவரங்களை விஞ்ஞானபீட பீடாதிபதி அலுவலக விளம்பரப்பலகையில் பார்வையிடலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(க-4)

# குருநகர் பகுதியில் கழிவுநீர் தேக்கம்

குருநகர், ஒக், 15

குருநகர் கடற்கரை வீதியில் தண்ணீர்த்தாங்கி வீதிச் சந்தியில் அமைந்துள்ள அதிபர் றோமான் சிலைக்கு அருகில் கழிவுநீர் தேங்கி நிற்பதனால் அவ்விடம் சேறும் சகதியுமாகக் காணப்படுகிறது.

நீர்தேங்கி நிற்பதனால் நுளம்புப்பெருக்கம் ஏற்பட்டு, தொற்றுநோய்கள் பரவும் ஏது நிலை காணப்படுவதாக அயலவர்கள் தெரிவித்தனர்.

(க-51)

# தன்னிச்சையாக நடந்ததால் ஜனாதிபதிக்கு இந்தக் கதி!

## மல்வத்த பீடாதிபதி கூறுகிறார்

கண்டி, ஒக். 15

சர்வாதிகாரப் போக்கில் நாட்டை யாராலும் முன்னேற்ற முடியாது. நாடாளுமன்றத்திற்கு ஜனாதிபதி செவிசாய்க்கவேண்டும். அதைவிடுத்து தான்தோன்றித்தனமாகச் செயற்பட்டதால்தான் இன்று ஜனாதிபதிக்கு இந்தக் கதி ஏற்பட்டுள்ளது — என்று கண்டி மல்வத்த பௌத்த பீடத்தின் மகாநாயக்கதேரர் ரம்புக்வெல ஸ்ரீவிபஸ்ஸி தெரிவித்துள்ளார்.

கடந்த 10 ஆம் திகதி பொது ஜன ஐக்கிய முன்னணியிலிருந்து எதிரணியில் அமர்ந்து கொண்ட முன்னாள் அமைச்சர்களான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், எஸ். பி. திஸநாயக்க, மகிந்த விஜேசேகர, எதிரிவீர பிரேமரத்ன, பந்துல குணவர்த்தன, அபேசுந்தர வீரக்கோன் ஆகிய அறுவரும், மல்வத்த பௌத்த பீட மகாநாயக்க தேரரைச் சந்தித்த போதே தேரர் மேற்கண்டவாறு கூறினார்.

மகாநாயக்க தேரர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:—

நாட்டில் நடைபெற்று வருவதை நான் நன்கு அறிவேன். பலரும் என்னிடம் நாட்டின் நடப்புகள் பற்றித் தெரிவித்து வருவதுடன் பத்திரிகை ஊடகங்கள் மூலமாகவும் நான் அறிந்து கொள்கிறேன்.

நாட்டில் சமாதானம்— விவசாயம் — பொருளாதாரம் — கலாசார பண்பாடுகள் எல்லாமே சீரழிந்துள்ளன. சகல இனமக்களும் சமாதானமாகவும் சமத்துவமாகவும் வாழும் நிலை இல்லை.

ஜனாதிபதியைச் சுற்றியும் ஊழல் பேர்வழிகளே உள்ளனர். அவர்களின் ஆலோசனைகளின் பேரிலேயே ஜனாதிபதி செயற்படும் நிர்ப்பந்தத்திற்குள்ளாகி யிருக்கிறார். அவர்களிடமிருந்து விலகாவிட்டால் அவருக்கு மீட்சியில்லை.

இப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி செயற்படும் கட்சியல்ல, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவுடன் அக்கட்சியையும் புதைகுழிக்குள் தள்ளிவிட்டனர் — என்றார்.

(க)

# மறை பரப்பு ஞாயிறு தினம்

குருநகர், ஒக். 15

எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மறை பரப்பு ஞாயிறு தினமாக கத்தோலிக்க தேவாலயங்களில் பூசைப்பலிகள் இடம்பெறும்.

(க-51)

உதயன்

## ஐ.நாவும் சமாதானமும்

இந்த ஆண்டு சமாதானத்துக்கான நோபல் பரிசு ஐக்கிய நாடுகள் சபைக்கும் அதன் செயலாளர் நாயகம் கோபி அனானுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கிறது.

வறுமை முதல் பயங்கரவாதம் வரை உலகின் பல்வேறு பிரச்சினைகளிலும் தலையிட்டு சிறப்பான - சமாதானம் நிறைந்த - உலகு ஒன்றை உருவாக்குவதற்கு பணியாற்றியமைக்காக ஐ.நாவுக்கு இந்த விருது வழங்கப்படுவதாக அறிவிகப்பட்டிருக்கிறது.

இரண்டாம் உலகப் போரின் முடிவில் இனிமேல் உலகில் மற்றொரு உலக யுத்தம் மூண்டுவிட இடமளிக்கக் கூடாது என்ற ஒரே நோக்கத்துடன் அப்போதைய தலைவர்களின் சிந்தனையில் உதித்துப் பின்னர் செயல்வடிவம் பெற்று உலகளாவிய அமைப்பாக உருவாகியது ஐ.நா. சபை.

உலகின் பல பகுதிகளிலும் மோதலற்ற நிலையைப் பேணுவதிலும் சமாதானத்தை நிலைநாட்டுவதிலும் ஐ.நா. சபை கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக ஆற்றி வந்த பணிகள் விதந்து பாராட்டப்பட வேண்டியவைதான். ஆனால் ஐ.நா. சபை அமைக்கப்பட்ட பின்னர் இதுவரை மூன்றாவது உலக யுத்தம் ஒன்று ஏற்படவில்லையாயினும் இன்று முழு உலகையும் அச்சுறுத்தும் பெரும்போர் உலகின் ஒரு பிராந்தியத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில் -

மூன்றாவது உலகப் போருக்கு அது வித்திட்டுவிடுமோ என எண்ணி உலக மக்கள் ஏங்கிக்கொண்டிருக்கும் சமயத்தில் -

சமாதானத்துக்கான உயரிய விருது ஒன்று ஐ.நாவுக்குக் கிடைத்திருப்பது அனைவரது கவனத்தையும் ஈர்த்திருக்கிறது.

சோவியத் யூனியனின் வீழ்ச்சி உலகில் கெடுபிடி யுத்தத்துக்கு முடிவு கட்டியதை அடுத்து உலகம் அமெரிக்கா என்னும் ஒரே வல்லரசின் கீழ் - குடையின் கீழ் - வந்தது. அதன் பின்னர் சர்வதேச பொலிஸ்காரனாகத் தன்னை வளர்த்துக்கொண்ட அமெரிக்காவின் தயவில் இயங்கும் ஓர் அமைப்பாக - முழுக்க முழுக்க ஓர் 'அமெரிக்க முகாமாக' ஐ.நா.சபை மாறிவிட்டதை உலக மக்கள் வேதனையோடு நோக்க நேர்ந்திருககிறது.

பல உலக விவகாரங்களில் அது கையாண்ட - கையாளுகின்ற - அணுகுமுறைகள் அமெரிக்க நலன் சார்ந்த போக்கையே வெளிப்படுத்தியிருக்கின்றன.

ஆரம்பத்தில் 'வீற்றோ வலு' என்கின்ற சிறப்பு அதிகாரத்தினால் ஐ.நாவின் தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்திய அமெரிக்கா பிற்காலத்தில் அதனை முழுகக முழுக்கத் தனது பெட்டிப் பாம்பாக மாற்றிக்கொண்டது.

இந்த வசதிவாய்ப்புக்களைப் பயன்படுத்தி உலகெங்கும் அமெரிக்க நலன் பேண எடுக்கப்பட்ட நடவடிக்கைகளே இன்று பயங்கரவாதமாக உருவெடுத்திருக்கிறது.

வழமையாக சர்வதேச விவகாரங்களில் ஐ.நா.சபையைத் தனது நோக்கங்களுக்குப் பயன்படுத்தி - ஐ.நா. முகமூடியை அணிந்துகொண்டு - வெளிநாடுகளில் தலையிடும் அமெரிக்கா, கடந்த மாதம் அந்நாட்டின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதலுக்குப் பதிலடி கொடுப்பதற்காக ஆப்கானிஸ்தான் மீது தானே நேரடியாகப் போர்தொடுத்திருக்கிறது.

இந்த விவகாரத்தில் ஐ.நா.சட்டதிட்டங்களை மதித்து நடக்க அமெரிக்கா முன்வரவில்லை.

ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதல் நடவடிக்கை 'உலகப் பயங்கரவாதத்துக்கு எதிரான போர்' என்ற அமெரிக்காவின் வார்த்தையின் அர்த்தத்தில் ஐ.நாவால் அங்கீகரிக்கப்பட்டிருப்பினும் கூட -

அது சர்வதேச ரீதியில் சரியான - நேர்மையான - நியாய மான ஒரு நடவடிக்கை அல்ல என்பது உலக மக்கள் சனத்தொகையில் பெரும் பகுதியை வகிக்கும் அரபு மற்றும் இஸ்லாமிய மக்கள் மத்தியிலும் உலகெங்கும் ஒடுக்கப்படும் சிறுபான்மை இனக் குழுமங்கள் இடையேயும் உருவாகிவரும் தீவிர அமெரிக்க எதிர்ப்பு உணர்வு அலை மூலம் நிரூபிக்கப்பட்டு வருகிறது.

'பயங்கரவாதம்' எங்கிருந்து, எதற்காக, எப்படி உருவெடுக்கிறது என்பதை அறிந்து அதற்கான சரியான காரணங்களைக் கண்டறிந்து பரிகாரங்களைத் தேடும் முயற்சிகளை விடுத்து 'பயங்கரவாதம்' 'பயங்கரவாதம்' என்று அமெரிக்கா கூறும் வார்த்தைகளை உலக நாடுகள் அப்படியே திருப்பி ஒப்புவித்துக் கொண்டிருக்கும் வரை செப்ரெம்பர் 11 இல் நிகழ்ந்தது போன்ற அனர்த்தங்கள் உலகில் தொடரவே செய்யும்.

தற்போதைய இந்தக் குழப்பமான நிலைமையில் இருந்து (Globle Disorder) உலகை மீட்க ஐ.நாவால் முடியுமா என்பதும் கேள்விக்குரியதே.

# பண்டத்தரிப்பு சுகாதாரப் பிரிவில் நாய்களுக்கு விசர் நோய் தடுப்பூசி

## இன்று முதல் புதன்வரை போடப்படும்

சண்டிலிப்பாய்,ஒக்.15

பண்டத்தரிப்பு பொது சுகாதார பரிசோதகர் பிரிவில் வீட்டு வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் வராது தடுப்பூசி போடும் பணி இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது. இன்றைய தினம் பிரான்பற்று, முருகமூர்த்தி கோயிலடி, சென்.மேரிஸ் சனசமூக நிலையம், பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக முன்றில் (சந்தையடி), வடலியடைப்பு கலைவாணி சனசமூக நிலையம், வடலியடைப்பு அரசடி சனசமூக நிலையம் ஆகிய இடங்களில் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை தடுப்பூசி போடப்படும்.

நாளை செவ்வாய்க்கிழமை மாதகல் பிள்ளையார் கோயிலடி, மாதகல் செபஸ்தியார் கோயிலடி, சாந்தை சில்லாலை, சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகிய இடங்களில் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை தடுப்பூசி போடப்படும்.

17ஆம் திகதி புதன்கிழமை இளவாலை சென்.யூட் சனசமூக நிலையம், இளவாலை அரசினர் மத்திய மருந்தகம், மாரீசன்கூடல் சுப்பிரமணிய வித்தியாசாலை அருகில், பெரியவிளான் ப.நோ.கூ. சங்கக் கடையடி ஆகிய இடங்களில் தடுப்பூசி போடப்படும். இதற்கான ஏற்பாடுகளை பண்டத்தரிப்பு பொது சுகாதார பரிசோதகர் எஸ்.இராசதுரை செய்துள்ளார். (க-135)

## நாட்டு நடப்பு

கேளுங்கள் தரப்படும்
தட்டுங்கள் திறக்கப்படும்
தேடுங்கள் கிடைக்குமென்ற
சேதியைச் சொன்னவர் ஜேசுபிரான்
அழுது அழுது கண் குளமாக
அலைகிறார் அடிய ரெல்லாம்
தொழுது தொழுது உடலது துவள
துஞ்சுறார் அடிய ரெல்லாம்?
எழுந்து வந்தெமது இன்னலைப் போக்க
இரங்கியே வேண்டுகிறார்
வழுவாது வந்து வானவர் போற்ற
வரம் தருவீர் எம் ஜேசுபிரான்.

- விகடகவி.

ஐ.தே.க. தலைமையிலான

# ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்து முஸ்லிம் காங்கிரஸ் தேர்தல் களத்தில்!

## அம்பாறை மாவட்டத்தில் தனித்து போட்டியிட முடிவு

கொழும்பு,ஒக்.15

பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக, அம்பாறை மாவட்டத்திலும் வடக்கு-கிழக்குக்கு வெளியே ஓரிரு மாவட்டங்களிலும் தனித்துப் போட்டியிடுவது குறித்து ஆராய்ந்து வருவதாக ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தரப்பில் இருந்து தெரியவருகின்றது.

இந்தக் குறிப்பிட்ட மாவட்டங்களில் மரச் சின்னத்தின் கீழ் தனித்துப் போட்டியிடுவதற்கும், மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்து யானைச் சின்னத்தில் போட்டியிடுவது தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் அறியவருகிறது.

முஸ்லிம் காங்கிரஸின் தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பாக உபகுழு மாவட்ட அமைப்பாளர்களுடன் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்திருக்கும் கட்சித் தலைமைப்பீடம், அடுத்த சில தினங்களுக்குள் அரசியல் உயர்பீடமும், மத்திய குழுவும் கூடி இறுதி முடிவை எடுக்கவிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து போட்டியிடுவது தொடர்பான உடன்படிக்கை பெரும்பாலும் அடுத்தவாரம் செய்துகொள்ளப்படக் கூடிய சாத்தியம் இருப்பதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை

பேரியல் அஷ்ரப் தலைமையிலான அணியினர் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து போட்டியிடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## மந்திகைக்கு மேலதிகமாக பல் வைத்திய நிபுணர்கள்

வடமராட்சி,ஒக்.15

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு மேலதிக பல் வைத்திய நிபுணர் ஒருவர் யாழ்பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலதிக பல்வைத்திய நிபுணர் வாரத்தில் திங்கள், செவ்வாய், சனி ஆகிய மூன்று தினங்கள் மட்டுமே நிரந்தரமாக உள்ள பல் வைத்திய நிபுணருடன் இணைந்து கடமையாற்றுவார்.

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் பணியாற்றும் பல் வைத்திய நிபுணர் டாக்டர் திருமதி சுகிர்தராணி என்பவரே இம்மேலதிக பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளார்.

இவர் வாரத்தில் ஏனைய தினங்களான புதன், வியாழன், வெள்ளி ஆகிய மூன்று தினங்களும் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றுவார். (க-173)

## சிறுவர்களுக்கு சத்துணவு உருண்டைகள்

கரவெட்டி பிரதேச சபை எல்லைக்குள் வதியும் சிறுவர்களுக்கு சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.

இப்பிரதேசத்தில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினால் நடத்தப்பட்டு வரும் சிகிச்சை நிலையங்களுக்கு சிகிச்சைக்கு வரும் சிறுவர்களுக்கு, கரவெட்டி பிரதேச சபையின் ஏற்பாட்டில் சத்துணவு உருண்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. (க-173)

## உலக உளநல நாள் - ஒக்ரோபர் 10

2001ஆம் ஆண்டின் கருப்பொருள்

'வேலைப்பளுவும் உளநலனும்'

மன உளைச்சலைக் கொடுக்கும் உணர்வுபூர்வமான துன்புறுத்தல்கள் வேலைத் தளத்தில் இருத்தல் கூடாது.

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வழிகாட்டி நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஒக்.15

ஐக்கிய இராச்சிய சிறுவர் பாதுகாப்பு நிறுவனம், யுனிசெவ் ஆகியவற்றின் ஆதரவுடன் வடக்கு - கிழக்கு கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சு அண்மையில் "விளையாட்டு அல்லாத விளையாட்டு" என்னும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வழிகாட்டி நூல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள 2ஆயிரத்து 810 முன்பள்ளிகளுக்கு இந்த நூல் விநியோகிக்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நூல் தொடர்பான மூன்று தினங்களுக்கான வதிவிடப்பயிற்சி நடத்தப்படவிருப்பதாகவும் -

இதன் பின்னர் சகல மாவட்டங்களிலுமுள்ள முன்பள்ளி ஆசிரியர்களின் செயற்பாடுகள் நேரடி மதிப்பீடு செய்யப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வதிவிடப் பயிற்சி மற்றும் தொடர் மதிப்பீடு என்பவற்றுக்கு யுனிசெவ், சர்வோதயம், ஐக்கிய ராச்சியத்துக்கான சிறுவர் பாதுகாப்பு, கன்றா ஆகிய நிறுவனங்கள் ஆதரவு வழங்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-4)

## வடமராட்சி மாணவருக்கு உபகரணங்கள்

வடமராட்சியிலுள்ள வசதி குறைந்த மாணவர்களுக்கு இலவசமாக பாடசாலை உபகரணங்கள் வழங்கும் வைபவம் எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. ஞானியார் கல்விக் கழகத் தலைவர் வே. நவரத்தினராசா தலைமையில் நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை மண்டபத்தில் இவ்வைபவம் நடைபெறவுள்ளது. (க-182)

## வைத்தியசாலைக் குழு ஆளுநரால் நியமனம்

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு பதினொரு பேர் கொண்ட வைத்தியசாலைக் குழு ஒன்றை வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனா நியமித்துள்ளார்.

இக்குழுவில் இடம்பெற்றுள்ளோர் விபரம் வருமாறு:-

டாக்டர் ஜீ.எஸ்.நச்சினார்க்கினியன், எஸ்.கணபதிப்பிள்ளை, கே.குமாரதாசன், எஸ்.பரராசா, எஸ்.சபாரட்ணம், வி.கிருஷ்ணசிங்கம், எம்.ஜெயக்குமார், எஸ்.அரவிந்தன், கே.நாகலிங்கம், பி.கிஷோகன், வி.சண்முகநாதன். (க-173)

யாழ். நாயன்மார்கட்டு

# ஸ்ரீபார்வதி வித்தியாலய மாணவரில் இருவர் விடுவிப்பு

## இன்னும் ஒருவர் தொடர்ந்து தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.15

கடந்த 11ஆம் திகதி பொலீஸாரினால் கைது செய்யப்பட்ட நாயன்மார்கட்டு ஸ்ரீபார்வதி வித்தியாலய மாணவர்கள் மூவரில் இருவர் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டுள்ளனர். மற்றவர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்.

சம்பவதினம் காலை 7 மணிக்கு யாழ்ப்பாணம் இராசாவின்தோட்டம் வீதியில் வைத்து கைது செய்யப்பட்டவர்களான நல்லூர் நாவலர் வீதியைச் சேர்ந்த செல்வரட்ணம் கமல்ராஜ்(வயது17), அரியாலையைச் சேர்ந்த சிவஞானம் சிவகுமார (வயது16) ஆகிய இருவருமே விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மூன்றாவது மாணவரான கொழும்புத்துறை ஏ.வி.றோட்டைச் சேர்ந்த நடராஜா அகிலகுமார் என்பவர் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-4)

## நாளை

புரட்டாதி 30
செவ்வாய்க்கிழமை
திதி : அமாவாசை
பின்னிரவு 1.53 வரை.
நட்சத்திரம் : அத்தம்
பிற்பகல் 3.45 வரை.
அமாவாசை விரதம்
சுபநேரம் : 10.32 - 12.02
ராகுகாலம் : 3.02 - 4.32
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

தீர்மானமுள்ள மனிதன் துன்பத்தைப் பொருட்படுத்தமாட்டான்.

## கன்னிகள் காத்திருக்கின்றன, கவனம்!



பற்றைக்குள் கிடக்கும்
வெடிக்காத ஷெல் ஒன்று,
இது மிக ஆபத்தானது.
பெரியவர்களிடம் சொல்லி
உடன் விரைந்து உரிய
நடவடிக்கை எடுக்கவேண்டும்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர்



## திருமதி சிவத்திரை சிவநாதன்
**B.A. (Hons), Dip in Ed. S.L.P.S. - I**

அவர்கள் 01.06.1996 தொடக்கம் இலங்கை அதிபர் சேவை தரம் I இற்குப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டுவதுடன், அவர்தம் கல்விப் பணி தொடரவும், நலம் பல பெற்று நீடு வாழவும் வாழ்த்துகின்றோம்.

*டச்சு வீதி,*
*சாவகச்சேரி.*
(C/18700)
சாவகச்சேரி நகர மாதர் அபிருத்திச் சங்கம்,

## அழைப்புக் கட்டளை
### வவுனியா மாவட்ட நீதிமன்றில்

வழ. இல.
நானாவிதம்/602
mise

லூயிஸ் அல்பிறேட் பெண நேசமலர்,
இல. 1, சிந்தாமணி பிள்ளையார் கோயில் ஒழுங்கை, வவுனியா.
*வழக்காளி*

எதிர்

இராசசிங்கம் லூயிஸ் அல்பிறேட்
உத்தரிய மாதா கோயிலடி, வசாவிளான்.
*எதிராளி*

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள எதிராளிக்கு

மேற்படி வழக்காளி, இந்நீதிமன்றில் உமக்கு எதிராக இவ்வழக்கைத் தாக்கல் செய்து அவ்வழக்கில்...

"குறித்த எதிராளியாகிய நீர், மேற்படி வழக்காளியை விட்டுப் பிரிந்து கடந்த பதினைந்து (15) ஆண்டுகளுக்கு மேலாக எதுவித தொடர்புகளும் இல்லாதும், நீர் எங்கு வசித்து வருகிறீர் என்னும் விலாசம் எதுவும் தெரியாத நிலையிலும் வாழ்ந்து வருவதாகவும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரதியில் தெரிவித்து.

இவ்வழக்கில் கொடுக்கப்பட்டுள்ள விலாசத்தில் தான் நீர் விட்டுப் பிரியும் பொழுது வாழ்ந்த விலாசம் எனவும் கூறி இவ்விதமாகப் பிரிந்து வாழ்ந்து வருதல் "ஒரு சட்டரீதியான பிரிவு" (a Judicial Separaration) என்னும் ஒரு பிரகடனம் வழங்குமாறும் கோரியுள்ளார்.

இதற்கு மறுமொழி ஏதேனும் இருப்பின், 2001ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 01ஆம் நாளன்று அல்லது அதன் முன்னர் இந்நீதிமன்றில் கோப்பிடும்படி, இத்தால் தேவைப்படுத்தப்படுவதோடு அவ்விதம் மறுமொழி கோப்பிடத் தவறும் பட்சத்தில் இவ்வழக்கானது மறு கட்சிக்காரர் இல்லாமல் ஒருமுக விளக்கம் மேற்கொள்ளப் படுமென அறிந்துகொள்ளுமாறு தேவைப்படுத்தவும்படுகின்றது.

நீர் பதிவுபெற்ற சட்டத்தரணி மூலம் தோன்றாதுவிடின் சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரி ஒன்றைத் தெரிவுக்கும் விவரக்கொத்து ஒன்றைக் கோப்பிடுமாறும் நீர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர். 2001ஆம் ஆண்டு ஒக்ரோபர் 11ஆம் திகதி நீதிமன்றக் கட்டளைப்படி.

*பதிவாளர்,*
**T.SURENDRAN**
Justice of Pease
Registrar & Deputy Fiscal
District & Magistrate's court, Vavuniya.

(C/18667)

## சேவை நீடிப்புக்கு விண்ணப்பிக்க பின்னடிப்பு

வலி.வடக்கு,ஒக்.15

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் பல அரச உயர் அதிகாரிகள் தமது சேவை நீடிப்புக்கான விண்ணப்பங்களை இம்முறை அனுப்ப முன்வரவில்லை என்று தெரியவருகின்றது.

சேவை நீடிப்புப் பெறுபவர்கள் சம்பளம் அல்லது ஓய்வூதியம் ஆகிய இரண்டில் ஒன்றை மட்டுமே பெற முடியும் என்ற கொள்கை நடைமுறைக்கு வந்துள்ளதைத் தொடர்ந்தே இந்நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

கடந்த காலங்களில் ஓய்வூதியம் பெற்றவர்கள் பலர் சேவை நீடிப்பு பெற்று ஓய்வூதியம், சம்பளம் ஆகிய இரண்டையும் பெற்றுக்கொண்டு கடமையாற்றி வந்தனர்.

சேவை நீடிப்புக்கு எவரும் விண்ணப்பிக்காததால் இம்முறை பல உயர்பதவிகள் வெற்றிடமாக உள்ளதாகவும் இப்பதவிகளுக்கு புதியவர்கள் நியமனம் செய்யப்படலாம் எனவும் தெரியவருகின்றது.

பிரதேச செயலர் மட்டத்திலும் கூட வெற்றிடங்கள் ஏற்படலாம் என்றும் கூறப்படுகின்றது. (க-86)

## இரு அல்வாய் வாசிகள் பிடிபட்டனர்

யாழ்ப்பாணம்,ஒக்.15

வடமராட்சியில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இருவர் கடந்த வெளிக்கிழமை இரவு பொதுமக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டனர்.

பருத்தித்துறை ஐயனார் கலட்டிப் பகுதியில் இரவு 7 மணியளவில் இளம்பெண் ஒருவர் தனது வீட்டுப் படலையடியில் நின்றுகொண்டிருந்த வேளை அவ்விடத்திற்கு வந்த இருவரில் ஒருவர் அப்பெண்ணின் கழுத்தில் இருந்த சங்கிலியைப் பறிக்க முற்பட்டுள்ளார். அதைத் தொடர்ந்து அப்பெண் அவலக்குரல் எழுப்பியதும அங்கு விரைந்த அயலவர்கள் அவர்களைத் துரத்திப்பிடித்தனர்.

நையப்புடைக்கப்பட்ட இவர்கள் பருத்தித்துறைப் பொலீஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் நடந்த இடத்தில் இருந்து ஒரு மைலுக்கப்பால் நாவலடிப் பகுதியில் வைத்துப்பிடிபட்ட அந்த இருவரும் அல்வாயைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (க-15)

**DISSERTATION BINDING**

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கமையக் கட்டிக் கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற் கான கட்டணம் ரூபா350/=)

தொடர்பு: *பாரதி பதிப்பகம்*
430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல.3081.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

நல்லூர் அரசடி வீதியில் வசிக்கும்
**திரு.திருமதி தம்பித்துரை உலகேஸ்வரி தம்பதிகளின்**
சிரேஷ்ட புத்திரன்
## த.கோடீஸ்வரன்

கடந்த 06.10.2001 அன்று யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் வெளிவாரி கலைமாணி (B.A.) பட்டத்தைப் பெற்றமையையிட்டு அவரை உளமாரப் பாராட்டுவதுடன், அவர் மேன்மேலும் பல கல்வி உயர்வுகளைப் பெற்று, சீருஞ் சிறப்புமாக வாழ்வில் உயர்ந்திட வேண்டுமென மனமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*161/8,அரசடி வீதி,*
*3ஆம் ஒழுங்கை,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.* (93423)
திரு.திருமதி இரட்ணசிங்கம் செல்வபாக்கியம்.
(பெரிய தந்தையாரும் பெரியதாயும்)

# நீங்கா நினைவலைகள்

முதலாம் ஆண்டு — 13ஆம் ஆண்டு





**அமரர்**
**இராமலிங்கம் அப்பையா**
*(ஓய்வுபெற்ற நீர்ப்பாசனத் திணைக்களம் **O.I.C,** மாதுறு ஓயா திட்ட மேற்பார்வையாளர்)*

**திருமதி**
**தவமணி அப்பையா**

22.03.1924 ← தோற்றம் → 20.03.1929
26.09.2000 ← மறைவு → 07.08.1988

**திதி: 15.10.2001**

*"தாயிற் சிறந்த கோயிலுமில்லை*
*தந்தை சொன்மிக்க மந்திரமுமில்லை."*

அம்மா, பப்பா நாங்கள் இருக்கும்வரை
உங்கள் நினைவு எங்களுடன் இருக்கும்.

*இல.01, புதிய செம்மணி வீதி,*
*கல்வியங்காடு,*
*யாழ்ப்பாணம்.*
***T.P.** 2923*
(93415)
- குடும்பத்தினர்.

# நெஞ்சகலா நினைவலைகள்

12ஆம் மாதம் — 52ஆம் மாதம்





**அமரர் அ.எட்வேட் பிறின்ஸ்**
*(இளைப்பாறிய முகாமையாளர், யாழ்.மாவட்ட அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்)*

**திருமதி மரியம்மா பிறின்ஸ்**
*(இளைப்பாறிய ஆசிரியை, யாழ்.கன்னியர் மடம் மகா வித்தியாலயம்)*

என்புந் தசையும் தந்தெம்மை
உலகில் வாழ வைத்தவர்களே!
அன்பு நெய்யில் விளக்கேற்றி
அருளாம் ஒளியைத் தந்தவர்களே!
இன்பந் ததும்பும் முகங்கண்டு
மாதங்கள் பலவும் போனதையோ
ஏங்கித் தவிக்கும் எம்விழிக்கு
ஆறுதல் தர வாரீரோ
நெஞ்சக் கூட்டில் தங்கள் பிரிவுத்துயரம்
எம் தேகம் மடியும் நாளன்றோ தீரும்!

*23, சுவாட்ஸ் லேன்,*
*யாழ்ப்பாணம்.*

தங்கள் நினைவில் வாழும்:
**பிள்ளைகள்,**
**மருமகன், மருமகள்,**
**பேரப்பிள்ளைகள்.**
(93124)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி கலைமணி இராசதுரை

மலர்வு
22-10-1954

உதிர்வு
26-09-2000

எங்கள் அன்புத் தாயே! எம் குடும்ப ஒளி விளக்கே!
உயர்வு காண்பதற்காகவே ஓயாது உழைத்த அன்னையே!
ஆறுதல் கூற எமக்கு யாருமில்லையம்மா!
வருடமொன்று ஓடிவிட்டதே! ஆறவில்லை எங்கள் துயரம்
நீங்கவில்லை உங்கள் நினைவு! தவிக்கின்றோம்
உங்கள் நினைவால் என்றுமே!

இன்று (15.10.2001) திங்கட்கிழமை நடைபெறுகின்ற ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*குடமியன்,*
*வரணி.*
(93416)
- குடும்பத்தினர்.

## குழந்தை இயேசுவுக்கு நன்றி!

என்னை நீ அதிகமதிகமாக மகிமைப்படுத்தும் போதெல்லாம் உனக்கு நான் அதிகமான ஆசிகளை அளிப்பேன் என மொழிந்த இயேசுவே! என் தேவைகளில் உதவிபுரிந்த உம் கருணைக்கு என் நன்றிகள்!!

(93328) - குழந்தை இயேசுவின் அடியாள்.

## வாழ்த்துகின்றோம்

**பேராசிரியர் கந்தையா குணரத்தினம்**

அறிவுயர் குடும்பத்தில் தோன்றி
ஆழமாய்க் கல்வி கற்று
இளமையில் பல பட்டம்
இனியவே *"பௌதிகத்தில்"*,
மேன்மையாய் மேலைநாட்டோர்
மெச்சி வழங்கிடப் பெற்றுக்கொண்ட
பெருமையே கொள்ளா உந்தன்
பெருமைக்கோர் *கௌரவப் பட்டம்*
எளிமையே உருவாம் வாழும்
எம் முரவனே! *குணமே!* நீடு வாழி!

(93414) - ஏழாலை வாழ் மக்கள்.

## அறிவித்தல்

**தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், கைதடி.**

வாக்காளர் அட்டவணை பார்வையிடுதல்.

சகல கிளைகளினதும் வாக்காளர் இடாப்பு பின்வரும் இடங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

01. கைதடி மத்தி, கைதடி வடக்கு ஆகிய கிளைகளின் இடாப்பு - கைதடி மத்தி கிளையில்
02. கைதடி மேற்கு, கைதடி தெற்கு ஆகிய கிளைகளின் இடாப்பு - கைதடி மேற்கு கிளையில்
03. நாவற்குழி தொடக்கம் கோவிலாக்கண்டி மத்தி வரையான ஏழு கிளைகளின் இடாப்பு சங்கத் தலைமைக் காரியாலயத்தில் (இனுவில் வைத்தியசாலை கட்டடம்) வைக்கப்பட்டுள்ளது.

சு.இ.கதிர்காமநாதன்,
*செயலாளர்.*

(C/18692)

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

**தென்மராட்சி சுகாதாரத் தொண்டர் சங்கம்**

மேற்படி தென்மராட்சிப் பிரிவு சுகாதாரத் தொண்டர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவை ஒதுக்கீடு செய்து மாதம் 1000/= வீதம் மே, ஜூன், ஜூலை மாதங்களுக்குரிய கொடுப்பனவை முதற் கட்டமாகத் தந்துதவியமைக்காக,



மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்,



யாழ்.மாவட்ட
ஈ.பி.டி.பி. பிரதம அமைப்பாளரும்
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான
உயர்திரு.
**கே.வி.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களையும்,



தென்மராட்சி பிரதேச
ஈ.பி.டி.பி. அமைப்பாளரும்,
சாவகச்சேரி நகரசபை உறுப்பினருமான
உயர்திரு.
**சூசைமுத்து அலெக்ஸ்சாண்டர் (சாள்ஸ்)** அவர்களையும்

*நன்றியுடன் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

(C/18699) - தென்மராட்சி சுகாதாரத் தொண்டர்கள்.

## ஈராண்டு நினைவஞ்சலி



**அமரர்**
**கனகசபை கவிதரன்**

*(மக்கள் வங்கி ஊழியர் - நெல்லியடி)*

மண்ணில் 12.04.1964 — விண்ணில் 08.10.1999

திதி: சதுர்த்தசி 15.10.2001

*ஆண்டுகள் இரண்டானாலும் உன் நினைவுகள் எம்மை விட்டு என்றுமே அகலா!*

ஓம் சாந்தி!

*நுணவிலிட்டி,*
*புலோலி தெற்கு,*
*புலோலி.*

(93420) - குடும்பத்தினர்.

### புறக்கணிப்பு

தென்மராட்சி,ஒக்.15

பாடசாலைகளில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் பட்டதாரி பாடசாலை முகாமைத்துவ உதவியாளர்கள் புறக்கணிக்கப்பட்டதாக புகார் கூறப்படுகிறது.

இந்தப் பட்டதாரிகளுக்கு முகாமைத்துவ உதவியாளர்களாக நியமனம் வழங்கப்பட்டபோதிலும் இதுவரை கடமைகள் வரையறுக்கப்படாததால் இவர்கள் பாடசாலைகளில் முழுநேர ஆசிரியர்களாக கற்பித்தலில் ஈடுபட்டுள்ளனர்.

பாடசாலை மட்டத்திலும் வலய மட்டத்திலும் நடைபெற்ற ஆசிரியர் தின விழாக்களில் இவர்கள் புறக்கணிக்கப்பட்டதாக பட்டதாரி பாடசாலை முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தினர் கவலையுடன் தெரிவித்தனர். (க-117)

### பிரிட்டிஷ் எம்.பி. கொழும்பு வருகை

கொழும்பு,ஒக்.15

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான போக்குடையவர் எனக் கருதப்படும் பிரிட்டனின் தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பரி கார்டினர், அந்நாட்டில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு அறிவிக்காமலேயே கொழும்புக்கு வந்திருப்பதாக 'த ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

அரசியல் காரணங்களுக்காகவே அவர் இலங்கைக்கு விஜயம் செய்திருப்பதாகவும் -

அரசியல் காரணங்களுக்காக இலங்கைக்கு விஜயம் செய்யும் பிரிட்டிஷ் எம்.பிக்கள் முதலில் அங்குள்ள இலங்கைத் தூதரகத்துக்கு அறிவித்துவிட்டுவருவதே வழக்கம் எனவும் -

அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

### சங்கானையில் திருட்டு

சங்கானை,ஒக்.15

இரவு நேரம் ஓடு பிரித்து இறங்கிய திருடர்கள் சங்கானை பிரதான வீதியில் அமைந்துள்ள புடைவைக் கடையில் பல பெறுமதிமிக்க பொருள்களை அபகரித்துச் சென்றுள்ளனர்.

விலையுயர்ந்த ரேடியோக்கள், மணிக்கூடுகள், புடைவைகள் உட்பட ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருட்டுப் போயுள்ளன. வர்த்தக சங்கத்தினரால் நடத்தப்படும் தனியார் பாதுகாப்புச் சேவையுடன், 50 மீற்றர் தூரத்தில் பாதுகாப்புப் படை முகாம், பொலீஸ் நிலையம் இருந்தும் இத்திருட்டு நடந்துள்ளது. இதுபற்றிய விசாரணையை மானிப்பாய் பொலீஸார் மேற்கொண்டுள்ளனர். (க-29)


## எமது வாடிக்கையாளர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்!

துர்க்கா பத்தி போன்று தரங்குறைந்த, போலியான பத்திகள் குறைந்த விலையில் விற்கப்படுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனவே வாடிக்கையாளர்கள் வாங்கும்போது அசல் துர்க்கா பத்திதானா? எனப் பார்த்து வாங்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

அண்ணா தொழிலகம்,
இணுவில் தெற்கு.

(C/18707)


## வாழ்த்தி வாழ்த்துகிறோம்



அளவையூர் அருட்கவி
**சீ.விநாசித்தம்பிப் புலவர்**

அவர்களுக்கு யாழ்.பல்கலைக் கழகம் "முதுகலைமாணி" பட்டம் வழங்கிக் கௌரவித்தமையையிட்டு நாம் பெருமகிழ்வு அடைகின்றோம். அன்னாரின் தெய்வப்பணி மேலும் தொடரப் பிரார்த்திக்கின்றோம்.

*கருங்காலி,*
*காரைநகர்.* (C/18708)

தி.கந்தசாமியும்
பாரியாரும்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) கல்விக்கோட்டத்தில் 2001 - தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த

1. **ஆனந்தமூர்த்தி சஞ்ஜியா** - 138 புள்ளிகள்
   யா/நாகர்கோயில் மகா வித்தியாலயம்
2. **சிவலிங்கராசா மாருதி** - 134 புள்ளிகள்
   யா/ஆழியவளை சி.சி.தமிழ்க் கலவன் பாடசாலை
3. **ஜெயவீரசிங்கம் ஜெசிதா** - 133 புள்ளிகள்
   யா/உடுத்துறை மகா வித்தியாலயம்
4. **அன்ரன் அருள்நாயகம் றஞ்சித்குமார்** - 131 புள்ளிகள்
   யா/நாகர்கோயில் மகா வித்தியாலயம்
5. **தங்கவேலு தேவலட்சுமி** - 120 புள்ளிகள்
   யா/நாகர்கோயில் மகா வித்தியாலயம்
6. **தங்கராசா தனுஷியா** - 120 புள்ளிகள்
   யா/மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை

ஆகிய மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன், பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் வடமராட்சி கிழக்கில் சேவைபுரிந்து இம்மாணவர்களின் கல்வி உயர்ச்சிக்கு வித்திட்ட ஆசிரியர்களையும், இடம்பெயர்ந்த நிலையில் மாணவர்களின் சிறந்த பெறுபேற்றுக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய ஆசிரியர்களையும், வடமராட்சி கிழக்குப் பிரதேச மக்கள் அனைவரும் நன்றியோடு பாராட்டுகின்றார்கள்.

(C/18693) - வடமராட்சி கிழக்கு மக்கள்.

## உள்ளத்தை உறைய வைத்தெம் உறவுகள் பறந்த ஓராண்டு நினைவலைகள்





**அமரர்**
**கணபதிப்பிள்ளை யோகலிங்கம்**

மண் மகிழ
1948-11-05

**செல்வி**
**தமிழரசி யோகலிங்கம்**

மண் மகிழ
1975-05-23

கண் நெகிழ: 2000.09.26
*திதி: சதுர்த்தசி 15.10.2001*

அன்புருவங்களே! ஆசைத் தெய்வங்களே!!
மதிகெட்டு மனம் கெட்டு
பரிதவித்து நாம் பதற
பாதிவழி எமை விட்டு
கொடிய 'ஷெல்' அரக்கன்
கொதிக்கக் கொதிக்க - உமைக்
கொண்டு சென்றானே....?
ஆண்டுகள் ஒன்றல்ல நூறு சென்றாலும்
ஆறாது எம் துயரம்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தற்காலிக முகவரி:
*விக்னேஸ்வரா வீதி,*
*கரவெட்டி மேற்கு,*
*கரவெட்டி.* (93436)

உங்கள் பிரிவால் வாடும்:
**குடும்பத்தினர்.**
*சந்தை வீதி, கொடிகாமம்.*

# வெள்ளைப் பிரம்புக்கு கை கொடுப்போம்

**விழிப்புலன்வலு இழந்தவர்களை நினைவுகூரும் வெள்ளைப்பிரம்பு தினம் இன்றாகும். அதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

சர்வதேச ரீதியில் இன்று (15.10.2001) "வெள்ளைப்பிரம்பு" தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

விழிப்புல வலுவிழந்தவர்கள் நடமாடுவதற்குப் பெரும் உசாத்துணையாக - ஊன்றுகோலாக - வழிகாட்டியாக விளங்குவது வெள்ளைப் பிரம்பு. எனவே இத்தகைய வெள்ளைப்பிரம்பின் மகத்துவத்தை - அதன் தனித்துவத்தை உலக சமூகம் உணர்ந்துகொண்டதன் விளைவே "வெள்ளைப்பிரம்பு" தினத்தின் பிரகடனத்துக்குக் காரணமாகும்.



வடக்கு - கிழக்கு மாகாணமட்ட தமிழ்த் தினப் போட்டியில் (தனி இசை பிரிவு 3) முதலிடம்பெற்ற "வாழ்வக" மாண வன் குலேந்திரன் ஜெகதீசன் மாகாணக் கல்வி அமைச்சரின் செயலாளர் க.பரமேஸ்வரனிடம் இருந்து பரிசுபெறும் காட்சி.

இந்தவகையில் வெள்ளைப்பிரம்பு தினத்தின் பிரகடனம் குறித்த விவகாரத்தில் "லயன்ஸ் கழகம்" ஆற்றிய பணி முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இந்தக் கழகத்தினரே "வெள்ளைப்பிரம்பு" தினத்தை முதன்முதலாக அறிமுகப்படுத்தியதுடன், வருடாந்தம் இந்தத் தினத்துக்கு அதிக முக்கியத்துவமும் வழங்கி வருகின்றனர்.


### உற்றநண்பன் வெள்ளைப்பிரம்பு

விழிப்புலன் வலுவிழந்தவர்களுக்கு உற்றநண்பனாக விளங்குபவனும் "வெள்ளைப்பிரம்பு" என்னும் பேசாப்பொருளே. இதனால்தான் "விழிக்குத் துணை வெள்ளைப் பிரம்பே!, வழிக்குத் துணை வெள்ளைப்பிரம்பே!, எமது சின்னம் வெள்ளைப்பிரம்பே!, எழுந்து வாழி வெள்ளைப்பிரம்பே!" என வெள்ளைப்பிரம்பின் மகத்துவம் கூறப்படுகின்றது.

இவ்வாறு பல்வேறு வகையிலும் நிறைந்த பெருமையைத் தன்பால் ஈர்த்துக்கொண்ட வெள்ளைப்பிரம்புக்கு நன்றிகூறும் வகையில் இன்றையதினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. எனவே இந்தத் தினத்தில் நாம் எல்லோரும் வெள்ளைப் பிரம்புக்குக் கைகொடுக்கவேண்டும். அதேவேளை விழிப்புலன் வலுவிழந்த சோதரர் அனைவரும் பல்கலையுடன் நீண்ட ஆயுளையும், நிறைந்த செல்வத்தையும் பெற்றுப் புகழ்பூத்து வாழ வாழ்த்துவோமாக.

விழிப்புலன் வலுவிழந்தவர்களின் சமூக மேம்பாட்டுக்காகவும், உறுதிமிக்க செயற்பாட்டுக்காகவும் உலகளாவியரீதியில் பல்வேறு நிறுவனங்கள், பொதுஅமைப்புக்கள் செயற்பட்டுவருகின்றன. அந்தவகையில் நமது தமிழ்மண்ணில் குறிப்பாக யாழ்.குடாநாட்டில் "வாழ்வகம்" அமைப்பு ஆற்றிவரும் சேவை மகத்தானதும், நன்றிகூரத்தக்கதும் ஆகும்.

"வாழ்வகம்", விழிப்புல வலுவிழந்தவர்களின் வாழ்வியல் தேவைகளையும், கல்வித் தேவைகளையும் பூர்த்தி செய்யும் மையமாக இன்று செயற்பட்டுவருகின்றது.



வாழ்வகச் சிறார்களுடன் நிலைய இயக்குநர் செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பி அவர்கள்.

தெல்லிப்பழையில் இயங்கிவந்த இந்த "வாழ்வகம்" இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து உடுவிலில் தனது செயற்பாடுகளை மேற்கொண்டு வந்தது. உடுவிலில் 26 பிள்ளைகள் தங்கியிருந்து தமது வாழ்க்கையை மேம்படுத்திக்கொள்ள "வாழ்வகம்" பெரிதும் உறுதுணையாக இருந்தது.

1995இல் ஏற்பட்ட இடப்பெயர்ச்சியால் "வாழ்வகம்" தனது நடவடிக்கைகளை இடைநிறுத்த வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டது. இதன் காரணமாகத் தன்சொத்துக்கள், முக்கிய ஆவணங்கள், கோவைகள் யாவற்றையும் இழந்ததுடன், "வாழ்வகம்" இயங்கிவந்த இடத்தையும் இழந்துவிட்டது.



'வாழ்வக' மாணவனான துரைராசா ஜசிந்தன் நாடாவில் ஒலிப்பதிவு செய்தவற்றை 'பிறைலி' அச்சில் பதிப்பதைப் படத்தில் காணலாம். இந்த மாணவன் இந்தவருடம் யாழ்.பல்கலைக் கழகத்துக்கு அனுமதிபெற்றுள்ளார்.

எனினும் விழிப்புலன் வலுவிழந்தவர்களின் குறிப்பாக மாணவர்களின் நன்மைகருதி 1998 ஜனவரியில், மானிப்பாயில் ஒரு சிறிய வீட்டில் "வாழ்வகம்" தனது பணிகளை மீண்டும் ஆற்றத் தொடங்கியது. அடிப்படைத் தேவைகள் பலவற்றை நிறைவேற்றமுடியாத - இக்கட்டான நிலையிலேயே வாழ்வகத்தின் செயறபாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

விழிப்புல் வலுவிழப்பு என்பது பல்வேறு கட்டங்களில் நிகழ்கின்றது. பிறந்தநாள் முதலாகவோ அல்லது பிற அனர்த்தங்களினாலோ இது நிகழலாம். இக்குறைபாடு ஏற்பட்டு விட்டதே என்பதற்காக அவர்களைப் புறக்கணித்துவிடக்கூடாது. சமுதாயம் வேறு, விழிப்புலன் வலுவிழந்தவர்கள் வேறு என்ற நிலையை எந்தக் கட்டத்திலும் தோன்றச்செய்துவிடல் ஆகாது. அவர்களும் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற அடிப்படை உண்மையை நாங்கள் அனைவரும் உணர்ந்துகொள்ளவேண்டும். இதனையே "வாழ்வகம்" அமைப்பு எமக்கு எடுத்துக்கூறுகின்றது.

வாழ்வகத்தின் முக்கிய நோக்கங்கள் சில வருமாறு:-

★ விழிப்புல வலுவிழந்த பிள்ளைகளுக்கு உணவு, உடை, வதிவிட வசதி அளித்தல்.

★ விழிப்புலன் வலுவிழந்தவர்களுக்கு கல்வி, கலை, கலாசாரம் போன்றவற்றில் பயிற்சி அளித்து அவர்களைச் சமுதாயத்துக்கு உதவும் நற்பிரஜைகளாக்குதல்.

★ விழிப்புலன் வலுவிழந்தவர்களுக்கு தொழிற்பயிற்சி அளித்தல், தொழில் வாய்ப்பு ஏற்படுத்தல்

"வாழ்வகம்" என்னும் விழிப்புல வலுவிழந்தோர் இல்லத்தைச் சேர்ந்த மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிபெற்றுள்ளனர். இந்த இல்லத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவர் கொழும்பு இராமகிருஷ்ண மிசன் மூலம் இந்தியா சென்று கணனிப் பொறியியலில் கற்கைநெறியைத் தொடரவுள்ளார்.

இதேவேளை -

வாழ்வகத்தைச் சேர்ந்த மாணவனான குலேந்திரன் ஜெகதீசன் அண்மையில் நடைபெற்ற அகில இலங்கை ரீதியிலான தமிழ்மொழித் தினப் போட்டியில் இசைத்துறையில் மாவட்ட, மாகாண, தேசிய ரீதியில் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

**தொகுப்பு: ஆனந்தன்.**

"எனவே "வாழ்வகம்" என்னும் சமூக அமைப்பு மூலம் எமது சமூகம் பல நல்ல நோக்குடைய செயற்றிட்டங்களை முன்னெடுக்க வேண்டுமானால் "வாழ்வத்தின்" கரங்கள் பலப்படுத்தப்படவேண்டும். எனவே வாழ்வகத்தின் கரங்களைப் பலப்படுத்தவேண்டிய பாரிய பொறுப்பு தமிழ்ச் சமூகத்திடம் விடப்படுகின்றது. இன்றே வாழ்வகத்தின் கரங்களை வலுப்படுத்த உங்களைத் தயார்செய்து கொள்ளுங்கள். இவ்வாறு செய்வீர்களாயின் விழிப்புல வலுவிழந்தவர்களின் வாழ்வில் ஒளி ஏற்றியவர்கள் என்ற பெருமை உங்களையே சாரும்" - என்று அழைப்பு விடுக்கின்றார் வாழ்வகத்தின் மூலம் வலுவிழந்தோர் சேவையில் ஈடுபடும் செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பி.

அரசாங்கத்தினதும், பொதுநிறுவனங்களினதும் உதவியுடன் வாழ்வகத்துக்கு சுன்னாகத்தில் நிரந்தரப் பணிமனை ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. அதன் பின்னர் கூடுதலான பிள்ளைகளுக்கு வாழ்வகத்தால் உதவமுடியும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். ★

## பரிசளிப்பு விழா

சண்டிலிப்பாய்,ஒக்.15

வட்லியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவும், புதிய பெயர் மாற்று வைபவமும் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிககு வித்தியாசாலை அதிபர் வி.நடராஜா தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் பிரதமஅதிதியாகச் சண்டிலிப்பாய் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் கா.தனபாலசிங்கமும் சிறப்புவிருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் மு.பாலசிங்கமும் கலந்துகொள்வர். (க-135)

## வைத்தியசாலை கட்டட வேலை பூர்த்தி

சண்டிலிப்பாய்,ஒக்.15

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் பல லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுவரும் வெளிநோயாளர் பிரிவு மற்றும் நிர்வாகக் கட்டடத்தின் வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. விரைவில் இக் கட்டடம் திறந்துவைக்கப்படவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (க-135)


## இதயங்கனிந்த நல் வாழ்த்துக்கள்!

2001ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய

**யா/வல்லை மகளிர் மகாவித்தியாலய மாணவர்கள்**

1. செல்வி அச்சுதானந்தன் ரம்யா – 138 புள்ளிகள்
2. செல்வன் ஜெயராஜ் சிந்துஜன் – 132 புள்ளிகள்
3. செல்வன் ஞானகுரு ரகுவர்மன் – 127 புள்ளிகள்
4. செல்வி சிவகணேஸ் நிரோஜினி – 121 புள்ளிகள்
5. செல்வி திருமால் சத்தியலீலா – 120 புள்ளிகள்

ஆகிய ஐவர்க்கும், அவர்களைப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்திய யா/வல்லை மகளிர் மகாவித்தியாலய ஆசிரியர்கள அனைவர்க்கும் எம் இதயங் கனிந்த நல்வாழ்த்துக்கள்.

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்,
பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

யா/வல்லை மகளிர் மகா வித்தியாலயம்,
வல்வெட்டித்துறை.

(93433)

## நன்றியுடன் பாராட்டுகின்றோம்

**யா/யாழ்ற்ரன் கல்லூரி - காரைநகர்**

2001ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த எமது பிள்ளைகள்

1. செல்வன் விசுவநாதன் பாலேந்திரன் 138 புள்ளிகள்
2. செல்வி பரமநாயகம் பவிதா 126 புள்ளிகள்
3. செல்வி செல்வரத்தினம் சசிகலா 121 புள்ளிகள்

ஆகியோரையும் மற்றும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 4 மாணவர்களையும் நாம் பாராட்டுவதுடன், கடமையுணர்வுடன் சேவையாற்றிய அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றிகூறிப் பாராட்டுகின்றோம்.

காரைநகர். (93431) - பெற்றோர்கள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2001ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில்

யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மாணவியான

**செல்வி கமலானந்தன் உமாஜினி**

147 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு கற்பித்த வகுப்பாசிரியர்க்கும், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இவர் கல்வியில் மேலும் பல்கலையும் கற்று, சிறந்து விளங்கி, வாழ்க வளர்க எனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
திருமதி சர்வேஸ்வரலலீதா கமலநாதன் (அன்ரி),
தம்பி, மாமா, பெரியப்பா, விமோ அன்ரி,
சர்மி அக்கா, அத்தான் (லண்டன்),
சர்மிலன் அண்ணா (லண்டன்),
சர்வன் அண்ணா, சந்திரன் அண்ணா.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (93438)

## பெருமையுடன் பாராட்டுகின்றோம்

யா/வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலய மாணவி

**செல்வி டுசாந்தி சிவபாதம்**



2001 - 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 125 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவருக்குக் கல்வி அறிவூட்டிய அதிபர், ஆசிரியர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

துறையூர்,
வேலணை.

பழைய மாணவர் சங்கம்,
யா/வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம்.

(93440)

## பாதுகாவலர் சங்கம் அறிவிப்பு:

# காணமற்போனோரின் தகவல்தர அரச அதிபருக்கு 3வார அவகாசம்

### இல்லையேல் செயலகம் முன்பாக மறியல்

குடாநாட்டில் 96-97 ஆம் ஆண்டு காலப் பகுதியில் காணாமற்போனோரின் விவரங்களை மூன்று வாரங்களுக்குள் வெளியிட வேண்டும். இல்லையேல் யாழ். செயலகம் முன்பாக மறியல் போராட்டம் நடத்தவுள்ளோம்.

குடாநாட்டில் கைதாகிக் காணாமற்போனோரின் பாதுகாவலர் சங்கம் யாழ். அரச அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வீடுகளில், வீதிச்சோதனை நிலையங்களில் வைத்துக் கைது செய்யப்பட்ட எமது உடன் பிறப்புக்கள் தொடர்பான விவரங்களைப் பெற்றுத் தருமாறு கோரி செயலகம் முன்பாக முன்னர் மறியல் போராட்டம் ஒன்றை நடத்தினோம்.

அச்சமயம் அங்கு பிரசன்னமான தாங்கள் மூன்று மாதங்களுக்குள் விவரங்களைப் பெற்றுத்தருவதாக எமக்கு உறுதியளித்திருந்தீர்கள். உறுதிமொழி வழங்கி 18 மாதங்கள் கடந்த போதும் எந்த வித விவரங்களையும் தரவில்லை என்பதைக் கவலையுடன் தெரிவிக்க விரும்புகின்றோம்.

அடுத்த மூன்று வார காலத்துக்குள் எமதுஉடன்பிறப்புக்கள் தொடர்பான விவரங்களைப் பெற்றுத் தாருங்கள். இல்லையேல் செயலகம் முன்பாக மறியல் போராட்டத்தை ஆரம்பித்து, எமக்கு நீதி கிடைக்கும் வரை போராடுவோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்திய சாலையில் பணிபுரிந்துவிட்டு வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்த சமயம் கைதாகிப் பின்னர் காணாமற்போன மூவரின் சம்பளத்தை அவரது குடும்பத்தினருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கும்படியும் —

இல்லையேல் ஆஸ்பத்திரி முன்பாகவும் மறியல் போராட்டம் செய்யப்போவதாகவும் —

அந்த அமைப்பு ஆஸ்பத்திரிப் பணிப்பாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது (ஐ-3)

## ஒரே இரவில் 6 வீடுகளில் திருடர்கள் புகுந்தனர்!

### நகை, பணம் அபகரிப்பு

நெல்லியடி, ஒக். 15

ஒரே இரவில் ஆறு வீடுகளுக்குள் புகுந்த திருடர்கள், உறங்கிக் கொண்டிருந்த இரு பெண்களின் சங்கலிகளையும் பெருமளவு பணத்தையும் அபகரித்துக் கொண்டு தப்பியுள்ளனர்.

இத் துணிகரத் திருட்டுச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் புலோலியில் உள்ள புற்றளையில் இடம்பெற்றது.

புலோலி மகா வித்தியாலய வீதியைச் சேர்ந்த வீ. கனகரத்தினம் என்பவரின் வீட்டிலிருந்து இரண்டரைப் பவுண் நிறையுடைய சங்கிலியையும், இவரது வீட்டுககு அருகில் உள்ள கந்தசாமி என்பவரின் வீட்டிலிருந்து, 2 பவுண் நிறையுடைய சங்கிலியையும் அபகரித்த திருடர்கள், புலோலி தெற்குப் பகுதியில் மேலும் நான்கு வீடுகளுக்குள் புகுந்து, அங்கிருந்து, டோச் லைற், தேசிய அடையாள அட்டைகள், உடுபுடைவைகள் பணம் போன்றவைகளையும் சூறையாடிக் கொண்டு தலைமறைவானார்கள்.

இத் திருட்டில் ஈடுபட்டவர்களைக் கைது செய்யப் பருத்தித்துறைப்பொலீஸார் வலை விரித்துள்ளனர். (ஐ-109)

## வடமராட்சி கிழக்கிலும் நெல் விதைப்பு ஆரம்பம்

வடமராட்சிகிழக்கு.ஒக்.15

பருவ மழை ஆரம்பித்ததை அடுத்து வடமராட்சி கிழக்கில் தற்போது மக்கள் வசிக்கும் குடத்தனை, அம்பன் பகுதிகளிலும் விவசாயிகள் நெல் விதைப்பு நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்கின் ஏனைய பகுதிகளிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்துள்ளமையினால் நூற்றுக்கணக்கான ஹெக்டெயர் நெல் வயல்கள் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன. (ஐ-182)

### குடாக்கடலில் கடந்த மார்ச் மாதம்

## புலிகளிடம் சிக்கிய மீனவரை செஞ். குழு அழைத்துவந்தது

குருநகர், ஒக். 15

குடாக்கடலில் பூவரசம் தீவுக் கடலில் கடலட்டை பொறுக்கச்சென்ற சமயம் விடுதலைப் புலிகளிடம் சிக்கியதாகக் கூறப்படும் குருநகர் மீனவர் ஒருவர் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் முயற்சியால் வன்னியில் இருந்து மீண்டும் இங்கு அழைத்துவரப் பட்டிருக்கின்றார்.

கடந்த மார்ச் மாதம் கடலில் வைத்து விடுதலைப் புலிகளால் அழைத்துச் செல்லப்பட்ட சிங்கராசா யோகநாதன் (வயது 33) என்பவரே மீண்டும் இங்கு வந்து சேர்ந்திருக்கிறார்.

வன்னியில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவினரால் பராமரிக்கப்பட்டு வந்த இவர் திருகோணமலை ஊடாக கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டார். (ஐ-51)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கனகலிங்கம் புவனேஸ்வரி(தேவி)

(மடத்தடி-மீசாலை)

உசன், மிருசுவிலைச் சேர்ந்த திருமதி கனகலிங்கம் புவனேஸ்வரி (தேவி) நேற்று (14-10-2001) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் விநாசித்தம்பி கனகலிங்கம் (சிவலி) அவர்களின் அன்பு மனைவியும் செல்லையா—பொன்னம்மா (மீசாலை-மடத்தடி) ஆகியோரின் அன்பு மகளும் சிவராசா, சிவகுமார் (நீவில் - புஞ்சிபரந்தன், உருத்திரபுரம்) ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஐயாத்துரை கனகேஸ்வரி, நடராசா (துரை) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15—10—2001) திங்கட்கிழமை முற்பகல் 11-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

த. முகவரி:- தகவல்:-

N. சண்முகவேல் V. கனகலிங்கம் (சிவலி)

(சின்னண்ணன்) (கணவர்)

செல்லத்துரை வீதி, (குளத்தடி) உசன்.

சங்கரத்தை. (93454)

### நடராஜா சோமசுந்தரம்

(இளைப்பாறிய அதிபர்)

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா சோமசுந்தரம் அவர்கள் 13-10-2001 சனிக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் அன்னலட்சுமியின் (இளைப்பாறிய ஆசிரியை, ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தி.) அன்புக் கணவரும், கலைச்செல்வி (B.Sc.), காண்டீபன் (B.Sc. தென் ஆபிரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராமமூர்த்தி, கா. கயலினி (B.Sc. தென் ஆபிரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியாவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

சரஸ்வதி கனகரட்ணம்

ஆலடி:

ஆனைக்கோட்டை. (93455)

### செல்லையா நடராசா

(பிரபல கட்டட ஒப்பந்தகாரர்)

இலுப்பையடி, வல்வெட்டியைச் சேர்ந்த செல்லையா நடராசா (பிரபல கட்டட ஒப்பந்தகாரர்) நேற்று (14-10-2001) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று (14-10-2001) ஞாயிறு பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று, பூவுடல் எல்லன்குளம் மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தகவல்:

ந. பரமேஸ்வரி

(மனைவி)

இலுப்பையடி,

வல்வெட்டி. (93453)

## முஸ்லிம் காங்கிரஸும் இ.தொ.காவும் ஐ.தே.கவின் யானைச் சின்னத்தில்

கொழும்பு, ஒக். 15

எதிர்வரும் பொதுத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் அதிருப்தியாளர் குழு என்பன இணைந்து ஐ. தே. கட்சியின் யானைச் சின்னத்தில் போட்டியிடவிருக்கின்றன.

இது தொடர்பாக ஐ.தே. கட்சி, முஸ்லிம் காங்கிரஸ், பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அதிருப்தியாளர் குழு ஆகியவற்றுடன் ஒப்பந்தங்களைச் செய்துள்ளது என்றும்—

இ. தொ. காவுடன் இவ்வாரம் ஒப்பந்தம் செய்யவிருப்பதாகவும்—

ஐ. தே. கட்சியின் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலைத் தயாரிக்கும் பணியில் கட்சியின் உயர்பீடம் ஈடுபட்டுள்ளது என்றும்—

இவ்வார இறுதியில் பட்டியல்கள் இறுதி செய்யப்பட்டு விடும் என்றும்—

அவர் மேலும் கூறினார்.

மத வழிபாட்டுடன் கட்சியின் தலைவர்கள் பிரசாரங்களை ஆரம்பித்துள்ளனர் என்றும்—

சகல மாவட்டங்களிலும் பொதுக் கூட்டங்களை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும்—அவர் கூறினார் (ஐ-3)

## யாழ். இந்து வீரர் சாதனை

யாழ்ப்பாணம், ஒக். 15

யாழ். இந்துக்கல்லூரிக்கும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கும் இடையில் ஹாட்லி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற 13 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான கிரிக்கெட் போட்டியில் யாழ். இந்து மாணவன் செல்லத்துரை மதன் 16 ஓட்டங்களுக்கு ஒன்பது விக்கட்டுகளை வீழ்த்திச் சாதனை புரிந்துள்ளார்.

ஓர் ஓவரில் அடுத்தடுத்து மூன்று விக்கட்டுக்களைக் கைப்பற்றி 'ஹற்றிக்' சாதனையையும் அவர் நிலைநாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் 13 வயதுக்கு உட்பட்டோருக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் ஓர் ஆட்டமாகவே இந்தப் போட்டி இடம்பெற்றது.

இந்த ஆட்டத்தில் யாழ். இந்து அணி வெற்றிபெற்றது. (ஐ-3)

## தமிழர் ஆசிரியர் சங்கத்துக்கு சர்வதேச நிறுவனம் நிதி உதவி

வடமராட்சி கிழக்கு, ஒக். 15

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நவீன தொழில்நுட்ப செய்திப் பரிமாற்ற நடவடிக்கைகளுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு 'எடியுக்கேசன் இன்ரநாஷனல்' என்ற நிறுவனம் 500 அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.

இந் நிதியையும் சங்க நிதியையும் பயன்படுத்தி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளரின் அலுவலகத்திற்கு கணனி வசதியும் ஈ-மெயில், இன்ரநெற் வசதிகளும் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன (ஐ-182)

## அகவொளியில் குடும்பதின நிகழ்வுகள்

குருநகர் பாங்ஷால் வீதியில் அமைந்துள்ள அகவொளி குடும்பவளத்துணை நிலையம் நேற்று குடும்பதின நிகழ்வுகளை நடத்தியது.

கிறிஸ்தவ குடும்ப இயக்கத் தலைவர் ஜீவறாஜ் தலைமையில் அகவொளி கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை முதன்மை விருந்தினராகவும் கொழும்புத்துறை சென்.ஜோசப் வித்தியாலய அதிபர் மா. ஞானப்பிரகாசம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.

யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அருட்திரு. ஜே. பி. ஈ. செல்வராஜா அடிகள் குத்து விளக்கேற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார். (க-51)

## கண்ணீர் அஞ்சலி

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன

ஒகலைசர் லயன் S. N. கதிர்வேல்

அவர்களின் தாயார்

### திருமதி நமச்சிவாயம் மனோன்மணி

அவர்கள்

காலமானதையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

ஹரயிஸ் றபல் தர்மராசா

சு. திருச்செல்வம்.

(93456)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### வீடு தேவை

இரண்டு பேர் தங்குவதற்கு சகல வசதிகளுடன் கூடிய வீடொன்று வாடகைக்கு உடன்தேவை நல்ல வாடகை தரப்படும். தொடர்பு: விள. இல.1372, மே/பா. உதயன்.

(93323)

### தவறிவிட்டது

இரத்தினம் ஜெயரூபன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.793224460V), விசேட அடையாள அட்டை (இல.0905026556) என்பன வடமராட்சி வல்லிபுரக் கோயிலுக்குச் செல்லும் வழியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இ.ஜெயரூபன், சங்குவேலி தெற்கு, மானிப்பாய் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

(93427)

### கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள கொழும்பில் இருந்து தருவித்து டாக்டரின் தனிப்பாவனையில் உள்ள ஒஸ்டின் கேம்பிறிச் - A-60 கார் (Austin Cambridge) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 18/10, வைமன் வீதி, யாழ்ப்பாணம்.

(93422)

### மணமகன் தேவை

1963 ஆம் ஆண்டு, உத்தரட்டாதி 4ஆம் பாதம், கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, பட்டதாரி ஆசிரியருக்கு பண்பான, பொருத்தமான மணமகன் தேவை. சுத்த சைவபோசனம் விரும்பத்தக்கது. குறிப்பு, விலாசம் பூரண விவரங்களுடன் தொடர்புகொள்க. விள.இல.1377, மே.பா.உதயன்.

(93434)

### இறைச்சிக் கோழி

புள்ராயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. இலவசமாக சுத்தம்செய்து கொடுக்கப்படும். Y.A. கரேஸ், மருதங்கேணி வீதி, கிராமக்கோடு, பருத்தித்துறை.

(93422)

### வீடற்றவன்

எல்லாவகை இலக்கியங்களும் படைத்த அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் "வீடற்றவன் நாவலின் விளக்கமும் விமர்சனமும்" நூல். O/L மாணவர்கள் தமிழ் இலக்கிய பாடம் கற்கப் பயன்படும் 50 பக்கங்கள் ரூபா 25/=.

(93437)

### விரிவுரைகள் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.15

யாழ்பல்கலைக்கழக உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறியின் 2ஆம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவிருக்கின்றன.

(க-135)

### கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.15

யாழ்மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம், பாடசாலைகளுக்கிடையில் கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் நடத்திவரும் சுற்றுப்போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

☆ பிற்பகல் 3.30 மணி - வேம்படி மகளிர் கல்லூரி எதிர் உடுவில் மகளிர் கல்லூரி.

☆ மாலை 4.30 மணி யாழ். இந்துக் கல்லூரி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி.

(3)

### கோமாரி கப்பலில் தேங்காய், கிழங்கு

வடமராட்சி,ஒக்.15

பருத்தித்துறை துறைமுகத்துக்கு வந்து சேர்ந்துள்ள 'கோமாரி' கப்பலில் உருளைக்கிழங்கு, தேங்காய், ஓடுகள் (கூரை ஓடுகள்) என்பன உட்பட்ட பல்வேறு அத்தியாவசியப் பொருள்கள் எடுத்துவரப்பட்டுள்ளன.

இப்பொருள்கள் இறக்கும்பணி துரிதமாக நடைபெற்றுவருகிறது.

(3-173)


### படிவம்

★தொழில்நுட்பக் கல்லூரி அனுமதிக்கான விண்ணப்பப்படிவம்

★இந்துசமய கலாசார அலுவலர் பதவிகளுக்கான விண்ணப்பப் படிவம்

ஆகியன விற்பனையாகின்றன.

பாரதி பதிப்பகம்,

430, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.


## வாழ்த்துகின்றோம்

வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலையிலிருந்து
2001ஆம் ஆண்டின் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில்
சித்திபெற்ற மாணவர்களான

செல்வன் செ.அருட்குமரன் (149 புள்ளி),
செல்வி து.உதயகலா (146 புள்ளி),
செல்வன் பு.மேலாஜிபிரியா (136 புள்ளி)

ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
(93449) வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலை.

## கண்ணீர் அஞ்சலி

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன வட பிரதேச முகவர்
திரு.ந.கதிரவேலு J.P. அவர்களின் பாசமிகு தாயார்

### திருமதி நமசிவாயம் மனோன்மணி

அவர்கள் காலமாகியதையிட்டு துயரிலாழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*அன்னாரின் ஆத்மா சாந்தி அடைவதாக!*

*மொடேர்ண் ஸ்ரோர்ஸ்,*
*நெல்லியடி.* (93445)

திரு.அன்ரன் செல்வராசா
குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1931 - 09 - 25

மறைவு 1999 - 10 - 08

### அமரர் செல்லையா கார்த்திகேசு

திதி: 15.10.2001

எம்மை வாழவைத்த தெய்வம் எமை ஏங்கவிட்டு வானம் சென்றதேனோ? இன்று நாங்கள் உம்மை நினைத்து உருகியே துடிக்கன்றோம். அந்தப் பொல்லாத காலன் உங்களை எங்களிடமிருந்து பிரித்துவிட்டான்- ஆனால் எம் உள்ளத்திலிருந்து உம் நினைவைப் பிரிக்கவே முடியாது.

*உங்களின் ஆத்மா சாந்தியடைய*
*அராலி முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.*
*ஓம் சாந்தி!*

*செல்வா வீதி,*
*அராலி வடக்கு,*
*வட்டுக்கோட்டை.* (93377)

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 10ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 27 - 04 - 1962

மறைவு 15 - 10 - 1991

### திருமதி
### சிவகௌரி ஜெகதீஸ்வரன்

*பார்த்திருக்கப் பத்து ஆண்டுகள்*
*பறந்து போய் விட்டனவே!*
*நேற்றுப் போல் இருக்கிறதே! - உமது*
*நினைவலைகள் எம்மை வாட்டுகின்றனவே!*
*எங்களைப் பிரிந்து செல்ல எப்படித்தான்*
*உங்களுக்கு மனம் வந்ததோ?*
*உங்களை நிதம் நினைத்தே*
*நாம் இங்கு வாடுகின்றோம்!*

பிரிவுத்துயரில்:
கணவர்: இ.ஜெகதீஸ்வரன்,
பிள்ளைகள்: டயானா (கனடா),
சாரா (விஸ்வமடு),
றியோ அன் கிறீம் சுவீட் ஹவுஸ்
(விஸ்வமடு).

*சுதாஸ் ஐஸ்கிறீம்*
*(றியோ குடும்பம்)*
*448, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.* (93446)

## நன்றியுடன்
## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன்*
*செல்வன்*
### இ.வினிபிறட் ஸ்ரீபன

அவர்கள் 2001 - 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 142 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தமையையிட்டு அவரைப் பாராட்டுவதுடன், நெறிப்படுத்திய அதிபர், ஆசிரியர், "சிசிலியன்" கல்வி நிறுவன ஆசிரியர்களையும் நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*74/3, குருசோ வீதி,*
*யாழ்ப்பாணம்.* (93448)

பெற்றோர்கள்:
திரு.திருமதி அ.இ.ஜெயதாசன்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கோப்பாய் நாவலர் வித்தியாலய மாணவன்
செல்வன் **கருணராசா மோகனராம்**



2001ஆம் ஆண்டு ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் இப்பாடசாலையில் அதிகூடிய 147 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன், அவரது வெற்றிக்குப் பல வழிகளிலும் வழிகாட்டி அயராது உழைத்த அதிபர், ஆசிரியர்கள், பெற்றோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் இவர் மேன்மேலும் எல்லாத் துறைகளிலும் சிறந்துவிளங்க எல்லாம்வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

*சுன்னாகம் வடக்கு,*
*சுன்னாகம்.* (93441)

பெரியப்பா மகாலிங்கம் குடும்பம்,
ஆசையப்பா பாலச்சந்திரன் குடும்பம்,
சித்தப்பா இராசேந்திரன் குடும்பம்,
அத்தை சகுந்தலா சுந்தரலிங்கம் குடும்பம்.

## கண்ணீர் அஞ்சலி

நெல்லியடி மொடேர்ண் ஸ்ரோர்ஸ்
முன்னாள் பொறுப்பாளர்
திரு.மரிய யூட் யேசுகுமார்
அவர்களின் அன்புத் தந்தையார்



### சுவாம்பிள்ளை நீக்கொலஸ்

(இளைப்பாறிய புகையிரத தலைமைக் காப்பாளர்)

அவர்களின் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அமரருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

*அன்னாரின் ஆத்மா சாந்தி அடைவதாக!*

*மொடேர்ண் ஸ்ரோர்ஸ்,*
*நெல்லியடி.* (C-18709)

திரு.அன்ரன் செல்வராசா
குடும்பத்தினரும்,
நண்பர்களும்.

## மரண அறிவித்தல்

### சுவாம்பிள்ளை நீக்கொலஸ்

(இளைப்பாறிய புகையிரத தலைமைக் காப்பாளர்)

கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது கொழும்பை வதிவிடமாகக் கொண்டவருமாகிய சுவாம்பிள்ளை நீக்கொலஸ் 13.10.2001 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிறிசிற்றம்மா (செல்லம்)வின் அன்புக் கணவரும், ஜோர்ஜ் செல்வரட்ணம், லியோ விஜயரட்ணம், அன்ரோனியா, யசிந்தா, சரோஜினி, செல்விராணி, அன்ரன் சிறி, யேசுகுமார் ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், கனகமணி, ஜெகசிங்கம், அல்பிறேட், தேவராஜா, மேரி யஸ்மின் ஆகியோரின் அன்பு மாமனாரும், அமுதா, அமலதாஸ், சிசில் இன்பராஜன், மேர்ளின், சாந்தி ஆகியோரின் அருமைப் பேரனும் மரியாம்பிள்ளை இராசு, காலஞ்சென்றவர்களான பொன்னு, பாக்கியம் ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.10.2001) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் கல்கிசை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நெல்லியடி,*
*கரவெட்டி.* (C/18710)

தகவல்:
ச.அன்ரன் செல்வராசா (பேரமகன்)

# தனங்களப்பைக் கைப்பற்றுவதற்காக குடாக்கடல் வழியே புலிகள் ஊடுருவித் தாக்க திட்டமாம்!

## பாதுகாப்பு ஏற்பாடுகள் கடந்தவாரம்முதல் உஷார்

கொழும்பு,ஒக்.15

பூநகரிப் பகுதியில் புலிகளின் நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதாகக் கிடைத்த புலனாய்வு அறிக்கைகளை அடுத்து குடாநாட்டின் பாதுகாப்பு ஏற்பாடுகள் கடந்தவாரம் முதல் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாகத் தகவல் வெளியாகியிருக்கிறது.

யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சிசிர விஜேசூரியாவின் உத்தரவை அடுத்து இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

குடாக்கடலை ஊடறுத்து தனங்களப்பின் ஒரு பகுதியைக் கைப்பற்ற புலிகள் மீண்டும் திட்டமிட்டு வருவதாகப் படையினர் நம்புவதாகவும் -

மண்டைதீவு மற்றும் நாகர் கோயில் பகுதிகளிலும் புலிகளின் தாக்குதல்கள் இடம்பெறலாம் என்று அவர்கள் அஞ்சுவதாகவும் -

'சண்டே ரைம்ஸின்' பாதுகாப்பு ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் தனது கள நிலைவரங்கள் தொடர்பான பத்தியில் தெரிவித்திருக்கிறார். (ஐ)

## வீடு புகுந்து நகைகள் சூறை!

இரவுவேளை வீட்டிலுள்ளோர் உறங்கிய நேரம் வாள், கத்திகள் சகிதம் உள்ளே புகுந்த இனந்தெரியாத நபர்கள் அங்கிருந்து 40 பவுண் நிறையுடைய தங்க நகைகளையும், பெருமளவு பணத்தையும் சூறையாடியுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு பத்து மணியளவில் வடமராட்சிப் பகுதியிலுள்ள தம்பசிட்டியில் இடம்பெற்றது.

இது குறித்து பருத்தித்துறைப் பொலீஸ்நிலையத்தில் முறையிடப் பட்டுள்ளது. (ஐ-109)

# வீதியில் வைத்து மாணவியை கடத்திய இளைஞர் கோஷ்டி!

## மானிப்பாய்ப் பகுதியில் பரபரப்பான சம்பவம்

யாழ்ப்பாணம்,ஒக்.15

தனியார் கல்வி நிலையம் ஒன்றில் இருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த பாடசாலை மாணவி ஒருத்தி நேற்று பிற்பகல் மானிப்பாய் லோட்டன் வீதிப் பகுதியில் வைத்து ஆறுபேர் அடங்கிய இளைஞர் கோஷ்டி ஒன்றினால் கடத்திச்செல்லப்பட்டார்.

தகவல் கிடைத்து மாணவியைத் தேடிச்சென்ற உறவினர்கள், பின்னர் வட்டுகோட்டைப் பகுதியில் வைத்து அந்த மாணவியை மீட்டுள்ளனர். மாணவியைப் பலவந்தமாகக் கடத்திச் சென்றவர்களில் இருவரை மானிப்பாய்ப் பொலீஸ் கைதுசெய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீதியில் வைத்து மாணவியை வழிமறித்த இளைஞர் குழு, அவரது வாயினுள் கற்களை அமுக்கி குரல் எழுப்பாதவாறு செய்துவிட்டு ஓட்டோ ஒன்றில் ஏற்றிக் கடத்திச் சென்றதாகக் கூறப்படுகிறது.

வீதியில் வைத்து மாணவியைத் தூக்கி ஓட்டோவில் ஏற்றுவதைக் கண்ட சிலர், அவரை ஏன் அவ்வாறு செய்கிறீர்கள் என்று இளைஞர்களிடம் கேட்ட போது, அவருக்கு வலிப்பு நோய் ஏற்பட்டிருப்பதாகக் கூறிவிட்டு அவரை அவர்கள் ஓட்டோவில் ஏற்றிச் சென்றிருக்கின்றனர்.

வீதியில் வைத்து மாணவி ஓட்டோவில் ஏற்றிச் செல்லப்பட்ட தகவல் அவரது பெற்றோருக்குத் தெரியவந்ததும் அவர்கள் உடனடியாகப் பொலீஸாரின் உதவியுடன் அந்த ஓட்டோ சென்ற வழியில் தேடிச்சென்ற சமயம் பிரஸ்தாப மாணவி வட்டுக் கோட்டைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குக் கொண்டு செல்லப்பட்டிருப்பது தெரியவந்தது. பின்னர் மாணவி அங்கிருந்து மீட்கப்பட்டார்.

இளைஞர் கோஷ்டி ஒன்றின் இந்த அட்டகாசச் செயல் மானிப்பாய்ப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. (ஐ)


## இதயங் கனிந்த பாராட்டுக்கள்

*யா/வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலய மாணவி*

### செல்வி ருஷாந்தி சிவபாதம்



2001 – 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 125 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்து வித்தியாலயத்துக்கும், கிராமத்துக்கும் பெருமை தேடித் தந்தமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவருக்குக் கல்வி போதித்து நல்வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களுக்கும் மற்றும் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

துறையூர்
கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்.

(93439)



## ஒன்பதாம் ஆண்டு நிறைவுநாள்



### அமரர் பொ.செல்வரத்தினம்

*சமூக சேவைக்கும் கூட்டுறவுச் சேவைக்கும் தன்னை அர்ப்பணித்து எல்லோர் இதயங்களிலும் இடம்பிடித்த எமது ஐயாவிற்கு எனது அஞ்சலிகளைச் செலுத்துகிறேன்.*

- மனைவி.

*'மன்றம்'*
*லோட்டஸ் றோட்,*
*மானிப்பாய்.*

(93458)



## இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
1971 - 05 - 21



அதர்மத்தின் கையில்
1999 - 10 - 15

### அமரர் கணபதிப்பிள்ளை பத்மநாதன் (மாமா)

*வாழ்க்கை நிச்சயமற்றது.*
*மரணமோ நிச்சயமானது.*
*உன் மரணமோ மர்மமானது.*
*முகமூடிகளின் கோழைச்செயல்*
*கொடியோரின் முகமூடி கிழித்து*
*உன் முகவரிக்கு இறை வழியனுப்பும் வரை*
*உன் அன்பு நண்பர்களின்*
*உள்ளக் குமுறல் அகன்றிடுமோ!*

*உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*புலோலி,* (C/18714) - சாரையடி இளைஞர்கள்.


## திருத்தம்

நேற்றைய உதயனின் 2 ஆம் பக்கத்தில் 'பாராட்டும் இறை ஆசியும்' என்னும் தலைப்பில் வெளியான விளம்பரத்தில் -

பாராட்டுக்குரியவரின் பெயர் 'செல்வன் அருள்தாசன் ஜதின் யூட்' என்று இருக்க வேண்டும். தவறுதலாக அவரது தந்தையின் பெயர் அதில் விடுபட்டுவிட்டது.


**ராஜா** யாழ்ப்பாணம்

விஜய், சிம்ரன் நடிக்க

**ப்ரியமானவளே**

தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2.5 (புதிய நேரம்)

(C/18457)



**நாகம்ஸ்** சுன்னாகம்

சரத்குமார், தேவயானி, விக்ரம் நடித்த

**விண்ணுக்கும் மண்ணுக்கும்**

17 ஆம் திகதிமுதல்

**THE PLOT**

(ஆங்கிலம், மிகவும் விறுவிறுப்பான கராட்டி சித்திரம்)
(ரீல்ஸ்)

காட்சிகள்: 11.00, 2.30 (புதியநேரம்)

(93424)


# கல்விச்சாலைக் காட்சிகள்



ஆவரங்கால் மத்திய முன்பள்ளி நிலையத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் கீழ்ப்பிரிவு வெற்றிவீரனாகச் செல்வன் கருணாகரன் விஷனுதரன் தெரிவுசெய்யப்பட்டார். அவர்தமக்குரிய வெற்றிக்கேடயத்தினை சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்ட ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அதிபர் வே.பாலசுப்பிரமணியத்திடமிருந்து பெற்றுக்கொள்வதைப்படத்தில் காணலாம். (ஐ)



கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரியில் புதிதாகக் கட்டப்படவுள்ள இரு மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் வைபவத்தின்போது வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வீ.அருளானந்தம் மங்களவிளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். வி.சிவசிதம்பரம், நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் கே.சிற்றம்பலம் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (ஐ-173)



நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையின் பரிசளிப்புவிழா அண்மையில் நடைபெற்றது. வடபிராந்திய தொழில் நுட்பப் பயிற்சித் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் என்.யோகராஜன் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பதைப் படத்திற் காணலாம்.

கோப்பாய்க் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.சிவாஞான சுந்தரமும் பாடசாலை அதிபர் க. ஆனந்தராசாவும் படத்தில் உள்ளனர். (ஐ)



மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை பிரதான மண்டபத்துக்கான அடிக்கல் நடும்விழா அண்மையில் பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஈ.பி.டி.பி. கட்சியின் வலி.வடக்கு அமைப்பாளரும், பிரதேச சபை உறுப்பினருமான தி.சிவகுமார் அடிக்கல்லை நடுவதைப் படத்தில் காணலாம். அருகில் முன்னாள் தெல்லிப்பழை கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.வ.கணேசலிங்கம், கிராம அலுவலர் சு.பூபாலசிங்கம் அதிபர் ந.மகேஸ்வரன் மற்றும் பாடசாலை நலன்விரும்பிகள் காணப்படுகின்றனர். *(படம்: வலி.வடக்குச் செய்தியாளர்)*




யாழ்.றோட்டறிக் கழகத்தின் மாதாந்த அதிதிப் பேச்சாளர் தினம் அண்மையில் நடைபெற்றது. அதில் கட்டாயக் கல்வித் திட்டம் குறித்து 'யுனிசெவ்' அமைப்பின் யாழ்.பிரதிநிதி எலியனோரா உரையாற்றுவதை முதற்படத்திற் காணலாம்.

றோட்டறிக் கழகத்தின் கழக சேவை இயக்குநர் றோட்டேரியன் ரி.வாமதேவன் நன்றியுரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். (ஐ)

# தேர்தலில் ஐ.தே.கட்சி வென்றதும் வன்னி சென்று பிரபாவுடன் பேசுவோம்

## முன்னாள் அமைச்சர் திஸநாயக்கா

லண்டன்,ஒக்.15

தேர்தலின் பின்னர் ஐ.தே.கட்சி ஆட்சிக்கு வந்தவுடன் வன்னி சென்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் பேச்சு நடத்துவோம் என்று முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

லண்டனில் இருந்து ஒலிபரப்பாகும் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இனப்பிரச்சினைத் தீர்வில் முக்கிய பாத்திரம் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஆவார். அவரை ஒதுக்கிவிட்டு யுத்தத்துக்கோ, இனப்பிரச்சினைக்கோ தீர்வு காணமுடியாது.

ஐ.தே.கட்சி பதவிக்கு வந்தவுடன் வன்னி சென்று எங்கள் நாட்டுப் பிள்ளைகளுடன் நாங்கள் பேசுவோம் - என்று தெரிவித்தார். (ஐ-3)

# விமல் வீரவன்ஸவின் பெயரில் இரகசிய வங்கிக் கணக்கு!

## லஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு

கொழும்பு,ஒக்.15

நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் செய்த சமயம் பகிரங்கப்படுத்தப்படாத இரகசிய வங்கிக் கணக்கு ஒன்றை ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ வைத்திருந்ததாக லஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மக்கள் வங்கியின் நுகேகொட கிளையில் இந்த இரகசியக் கணக்கு இருந்ததாகவும் -

கடந்தமாத இறுதியில் இந்தக் கணக்கில் பத்து லட்சம் ரூபா இருப்பில் இருந்ததாகவும் -

கொழும்பைச் சேர்ந்த ஒருவர் இந்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மங்கள சமரவீரவின் தகவல் ஊடகச் செயலாளரான ருவான் பேர்டினாண்டஸ் என்பவரும், வீரவன்ஸவும் கூட்டாக இந்தக் கணக்கை வைத்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தில் தமது சொத்துக்கள் தொடர்பான விவரங்களை வெளியிட்ட சமயம் தமது பெயரில் உள்ள ஐந்து வங்கிக் கணக்குகள் பற்றித் தெரிவித்தார் என்றும் -

ஆனால் இந்த ரகசியக் கணக்குப் பற்றி அவர் எதுவுமே கூறவில்லை என்றும் -

தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

# தேர்தல் பொலீஸ் பிரிவு 20ஆம் திகதி முதல் இயங்கும்

கொழும்பு,ஒக். 15

தேர்தல் செயலக பொலீஸ் பிரிவின் நடவடிக்கைகள் எதிர்வரும் 20ஆம் திகதிமுதல் ஆரம்பமாக உள்ளதாக பொலீஸ் தலைமையக பேச்சாளர் ரியான்ஸி பெரேரா தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சிகள் தமது வேட்பாளர்களின் பெயர்களைப் பதிவு செய்ய ஆரம்பித்ததன் பின்னரே தேர்தல் வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார். (ஐ-9)

## திருமலை அலஸ்தோட்டத்தில் இருந்து

# சனியன்று கடலுக்குச் சென்ற 7 மீனவர் கரை திரும்பவில்லை

கொழும்பு,ஒக்.15

திருகோணமலை, அலஸ்தோட்டப் பகுதியில் உள்ள அகதிகள் நலன்புரி முகாமிலிருந்து நேற்றுமுன்தினம் மாலை மூன்று படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற 7 மீனவர்கள் இதுவரை கரை திரும்பவில்லை என்று முகாம் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

நேற்று நண்பகல்வரை இவர்கள் கரை திரும்பாததை அடுத்து ஏனையோர் படகுகளில் தேடிச்சென்றபோதிலும் அவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் -

இவர்கள் காணாமற்போனமை தொடர்பாக செஞ்சிலுவை சர்வதேசக் குழுவுக்கும் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் திருகோணமலை அலுவலகத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

IBMS IBMS IBMS IBIBMS IBMS
Module Examination
Ms Access
மேற்படி கற்கை அலகுக்கான பரீட்சைகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (21.10.2001) 10.00 am - 12.00 pm யா/இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. மாணவர்கள் 19.10.2001க்கு முன்னர் தங்கள் பதிவுகளை அலுவலகங்களில் மேற்கொள்ளவும்.
Director(Ad).
IBMS No.701 K.K.S Road, Jaffna.

CHEMISTRY CENTRE
83, பலாலி வீதி, கந்தர்மடம்
இணைந்த கணிதம்
A/L 2002
Tue.: 4 - 5, Wed.: 5.15 - 6.15 } சிக்கலெண்
Fri.: 4 - 5.30 → சார்புவேகம்
ஆரம்பம்:16.10.2001 (முதிய நேரம்)
P.SENTHILNATHAN B.Sc.

# தெற்கில் மின்வெட்டு நேரத்தை மேலும் குறைப்பதற்கு முயற்சி!

கொழும்பு,ஒக்.15

நாட்டில் தற்போது அமுல் செய்யப்பட்டுவரும் மின்வெட்டு நேரங்களை மேலும் குறைப்பதற்கு உத்தேசித்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

தற்போது மூன்று மணித்தியாலங்களாக உள்ள மின்வெட்டை இரண்டு மணித்தியாலங்களாகக் குறைப்பதற்கு முதலில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை -

நூறு மெஹாவாட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய இயந்திரம் ஒன்று களனி திஸ்ஸ மின்நிலையத்தில் அமைக்கப்பட்டு வருகிறது. இதன் பணிகள் எதிர்வரும் நவம்பர் மாத இறுதிக்குள் முடிவடைந்துவிடும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அதற்கு முன்னரே அதன் பணிகளை நிறைவுசெய்ய முடியும் என்று நம்புவதாகவும் சபையின் தலைவர் கூறியிருக்கின்றார். (ஐ-9)

## தனித்துப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிகள் அழைப்பு விடுத்துள்ள போதும் நாம் அவற்றையெல்லாம் நிராகரித்துவிட்டோம்.

தேசிய கட்சிகளான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, ஐ.தே. கட்சி ஆகியவற்றுடனும் எந்தவித ஒப்பந்தமும் வைக்கப்போவதுமில்லை.

தேர்தலுக்குப்பின் மத்தியில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வருகின்றதோ அந்தக் கட்சியுடன் பேரம் - பேசி அதற்கு ஆதரவு வழங்கி - மக்களுக்கான எமது பணியைத் தொடர்ந்து முன்னெடுப்போம் - என்று அவர் தெரிவித்தார். (ஐ-3)

## பதவிக்கு வரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

☆ விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டு தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினைக்கு நியாயமானதும் நிரந்தரமானதுமான ஒரு தீர்வைக் காண்பதற்கு நோர்வே நாட்டின் அனுசரணையுடன் விடுதலைப் புலிகளோடு பேச்சு ஆரம்பிக்கப்பட வேண்டும்.

மேற்கண்ட தீர்மானங்களுடன் தேர்தல் கூட்டணி அமைப்பது தொடர்பான தீர்மானமும் நேற்றைய கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கில் வெவ்வேறு மாவட்டங்கள் சம்பந்தமாக அந்தந்த மாவட்டங்களில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர்களின் ஆலோசனையின் அடிப்படையில் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ விடுதலை இயக்கம், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் போன்ற கட்சிகள் ஒன்றிணைந்து எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவது சம்பந்தமான அங்கீகாரம் வழங்குவதுடன் இது தொடர்பாக இறுதி முடிவுகளை எடுப்பதற்குத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியற் குழுவிற்கு அதிகாரம் வழங்குவது என்றும் தீர்மானம் எடுக்கப்பட்டது. (ஐ-3)

## பெரும் தொகையான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படகு அணியை கரையில் இருந்து 9 கடல் மைல் தொலைவில் வழிமறித்த கடற்படையினர் அதன்மீது தாக்குதல் தொடுத்தனர்.

இந்தத் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் படகு ஒன்று அழித்து நிர்மூலமாக்கப்பட்டதாகவும் மற்றொரு படகு சேதமாக்கப்பட்டதாகவும் படைத் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. விடுதலைப் புலிகள் தரப்பில் 10 போராளிகள் பலியானதாக சிரேஷ்ட கடற்படை அதிகாரிகள் கூறியிருக்கின்றனர். பலியானவர்களில் ஐவரின் பெயர்களை புலிகளின் வானொலித் தொடர்புகளை வழிமறித்துக் கேட்டபோது தெரியவந்ததாகவும் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ஆனால் இந்த மோதல் குறித்து புலிகள் தரப்பில் இருந்து எந்த விவரங்களும் வெளியிடப்படவில்லை.

இந்தக் கடற்சமர் நடந்த சமயத்திலேயே புலிகள் ஆயுத தளபாடங்களை மட்டக்களப்பு கரை ஊடாகத் தரையிறக்குவதில் வெற்றி கண்டிருப்பதாக அதிகாரபூர்வ பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன. ஆனால் இந்த ஆயுதங்கள் எந்த நாட்டில் இருந்து கடத்தி வரப்பட்டன. அவற்றில் எத்தகைய ஆயுதங்கள் அடங்கி இருந்தன என்பன போன்ற விவரங்களை அந்த வட்டாரங்கள் வெளியிடவில்லை. (ஐ)

## தரம் குறைந்த பாண் பறிமுதல்

வவுனியா,ஒக்.15

கிளிநொச்சி மாவட்டத்துக்கு உட்பட்ட அக்கராயன், வட்டக்கச்சி, கிளிநகர் ஆகிய பகுதிகள் தமிழீழ சுகாதார சேவையினரும், கிளிநொச்சி மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரும் இணைந்து பாணின் தரம் தொடர்பாகவும், அதன நிறை தொடர்பாகவும் ஆய்வுகள் மேற்கொண்டனர்.

இதன்போது 350 கிராமுக்குக் குறைவான நிறையுள்ள பாண், குறை நிலையில் வாட்டப்பட்ட பாண் மற்றும் தரம் குறைந்த பாண்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இவற்றில் நிறைகுறைந்த பாண்கள் கிளிநொச்சி மற்றும் வட்டக்கச்சி அரச மருத்துவமனை நோயாளர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. இதுவரையில் 700 இறாத்தல் பாண்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (ஐ)

## பிரதிப் பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

மேஜர் ஜெனரல் சரத்முனசிங்கவுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த பாதுகாப்பு வசதிகள் கடந்த சனிக்கிழமை முதல் நீக்கப்பட்டிருக்கின்றன.

அவருக்குப் பாதுகாப்பு வழங்கி வந்த மூன்று இராணுவ கொமாண்டோ வீரர்களையும், எட்டு சிப்பாய்களையும் அரசு அப்பணியில் இருந்து நீக்கியிருக்கின்றது.

விடுதலைப் புலிகளின் தாக்குதல் இலக்குகளில் ஒருவராகக் கருதப்படும் சரத்முனசிங்கவுக்கு அரசியல் பிரமுகர் என்பதற்காக மட்டுமன்றி இராணுவ ரீதியில் அவர் எதிர்நோக்கும் உயிர் அச்சுறுத்தலைக் கருத்திற் கொண்டே கடந்த காலங்களில் இப்பாதுகாப்பு வழங்கப்பட்டுவந்தது.

தற்சமயம் அவருடையதும், அவரது குடும்பத்தினரதும் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்குள்ளாகி இருப்பதாக அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஓடியோ, வீடியோ CD கள்
மலிவு விற்பனை
☆ வீடியோ CD தமிழ்ப்படங்கள் 250/=, 550/=
☆ வீடியோ CD பாடல்கள 350/=
☆ ஓடியோ CD கள 250/=, 300/=
☆ ஆங்கில வீடியோ CD (Film) 200/=
ஒரு சில தினங்கள் மட்டும்
அல்டி எலக்ரோனிக்ஸ்
(C/18715) 15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.10.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.